பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 09 வியாழக்கிழமை 25.11.2021 கதிர் 20

**இது ரகசியம் அல்ல!**

'சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி' – என்பார்கள். அந்தக் கதை போலாகியிருக்கின்றது இரசாயன உரங்கள், களைகொல்லிகள் மீது தடை விதித்த கோட்டா அரசின் நடவடிக்கை.

விவசாயிகள், பக்கம்02 »

# நினைவு கூரலுக்குத் தடை; பிரிட்டன் தரப்பில் விசனம்

## தொடர்ந்தும் மனித உரிமைகள் நிலைவரம் மோசம் என விசேட அறிக்கை சமர்ப்பணம்

லண்டன், நவம்பர் 25

இலங்கையில் தொடர்ந்து இந்த ஆண்டின் முதல் ஆறு மாத காலத்தில் கூட மனித உரிமைகள் நிலைவரம் மிகவும் மோசமாகவே இருப்பதாக பிரிட்டன் அவதானித்துள்ளது

உயிரிழந்த உற்றாருக்கான நினைவு கூரல் உரிமை கூட தடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக வடக்கு – கிழக்கு சமூகங்களுக்கு இந்த உரிமை மறுக்கப்பட்டுள்ளது.

–பிரிட்டனின், வெளிவிவகார மற்றும் பொது நலவாய அலுவலகம் இவ்வாறு தெரிவித்துள்ளது. ☞2

## கொரோனாவிலிருந்து மீண்டார் மனோ எம்.பி.



கொரோனா வைரஸ் தொற்றால் சுகவீனமுற்று கடந்த சுமார் பத்து நாள்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட எம்.பியுமான மனோ கணேசன் பூரண சுகம் பெற்ற நிலையில் நேற்று வீடு திரும்பினார்.

ஊடகங்களுக்கு இது பற்றி கருத்துக் கூறிய மனோ எம்.பி., சுகவீனமுற்ற வேளையில் ☞2

## தோல்விப் பயத்தால்தான் தேர்தலை இழுத்தடிக்கின்றது கோட்டாபய அரசு

### நாடாளுமன்றில் சஜித் அணி குற்றச்சாட்டு



மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு ஏன் அஞ்சுகின்றது? தேர்தலை எதிர்கொள்வதற்கு நாம் தயார். தோல்வி பயத்தால் தான் தேர்தலை அரசு இழுத்தடிக்கின்றது.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு – செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ☞2

## 23 பேர் மரணம்

இலங்கையில் மேலும் 23 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் சாவடைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் ☞2

## நேற்று மட்டும் 745 பேருக்கு கொரோனா

இலங்கையில் நேற்று 745 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் ☞2

## மாகாண சபை முறைமைக்கு உடனடியாகச் சமாதி கட்டவும்

### சபையில் அதாவுல்லா எம்.பி. வலியுறுத்து



மாகாண சபை முறைமை நாட்டுக்குப் பாரம். அதற்கு மக்கள் பணமே செலவிடப்படுகின்றது. எனவே, அந்த முறைமை இல்லாதொழிக்கப்பட வேண்டும்.

– இவ்வாறு தேசிய காங்கிரஸின் தலைவர் ஏ.எல்.எம். அதாவுல்லா வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர்,

ஒரே நாடு – ஒரே சட்டம் ☞2

### பிரபாகரனைக் குற்றஞ்சாட்டிய


## டக்ளஸுக்கு சபையில் கஜேந்திரன் பதிலடி

எங்களுடைய தேசத்தின் தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் காலத்தில் போதைப்பொருள் வியாபாரம் நடந்தது எனக் கூறிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கூற்றை வன்மையாகக் கண்டிக்கின்றேன். அந்தக் கருத்தை நிராகரிக்கின்றேன்.

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர், இது தொடர்பில் மேலும் ☞2

## 'எமது தேசியத் தலைவர்' என்று பிரபாகரனை விளித்த கஜேந்திரனுக்குச் சபையில் எதிர்ப்பு



### அவரின் உரையை ஹன்சாட்டில் இருந்து நீக்குமாறு சிங்கள எம்.பிக்கள் வலியுறுத்து

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை, நாடாளுமன்றத்தில் நேற்று 'எமது தேசியத் தலைவர்' என்று விளித்தமைக்கு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் எம்.பிக்கு சபையில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் அவரின் உரையை நாடாளுமன்றப் பதிவேடான ஹன்சாட்டில் இருந்து நீக்க வேண்டும் என்றும் ☞2

## கிண்ணியாவில் உயிரிழந்தவர்களுக்கு நாடாளுமன்றில் கூட்டமைப்பு அனுதாபம்



திருகோணமலை மாவட்டம், கிண்ணியா – குறிஞ்சாக்கேணியில் படகு கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்த மாணவர்கள் உள்ளிட்ட 6 பேருக்கும் நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொதுமக்கள், அரசியல் கட்சிகள் இது தொடர்பாக நடத்திய போராட்டங்களாலும்–

இந்தத் தடை நடவடிக்கைகளால் நாட்டின் உற்பத்தியில் ஏற்படப் போகும் மோசமான விளைவுள் பற்றிய அச்சத்தாலும்–

அந்தத் தடை விதிப்பை ஒருவாறு விலக்கிக் கொண்டிருக்கின்றது அரசு.

என்ன விளைவுகள் வந்தாலும் பின்வாங்க மாட்டோம் என்று சூளுரைத்து வந்த அரசும் அதன் தலைவர்களும் இப்போது வெற்றிகாரமாகப் பின்வாங்கி விட்டார்கள்.

ஆனாலும் அரசின் இந்த நடவடிக்கையின் விளைவு விபரீதமாக முடியப்போவது தவிரக்க முடியாதது என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

ஏற்கனவே பெரும் போகம் வாரங்கள் பல கடந்து விட்டது. இனி உரத்தைத் தேடி அல்லது இறக்குமதி செய்து பெற்று, விவசாயம் செய்வது என்பது இந்தப் போகத்துக்கும் சாத்தியமானதல்ல. ஆகவே, இம்முறை பெரும் போகம் முடியும் போது, இதுவரை விதிக்கப்பட்டிருந்த உரத்தடையின் விபரீதம் முழு அளவில் உணரப்படும். உற்பத்தி குறையும். விளைச்சலின்மையால் விலைகள் அதிகரிக்கும். நாடு நெருக்கடியைச் சந்திக்கும் – என்கின்றன அந்த வட்டாரங்கள்.

அடுத்த விடயம் – தனியார் எவ்வளவு உரத்தையோ, கிருமி நாசினியையோ இறக்குமதி செய்யலாம் என்று கூறப்படுகின்றது. அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் மருந்து வகைகளின் இறக்குமதிக்கே அந்நிய செலாவணிக் கையிருப்பின்றி துந்தணாப் போடுகையில் உரங்கள், கிருமிநாசினிகள் இறக்குமதிக்கான டொலருக்கு எங்கு போவது என்று கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

அப்படி தனியார் வர்த்தகர்கள் இறக்குமதி செய்தாலும், அவர்கள் நிர்ணயிப்பதுதான் விலை. அந்த உர வர்த்தகத்தில் அரசு சம்பந்தப்படதாம். விவசாயிகளுக்கு அத்தகைய உரங்களுக்கு மானியம் ஏதும் அரசு தராதாம். இதுதான் ஜனாதிபதி கோட்டாபய கடைசியாக விடுத்த அறிவிப்பு.

அப்படியானால் தனியார் வர்த்தகர்கள் நிர்ணயிக்கும் உயர் விலைக்கு நேரடியாக வாங்கி அவற்றைப் பயன்படுத்தினால் விளைச்சலின் விலை எக்கச்சக்கமாக இருக்கும். அந்த விலைக்கு விளைச்சலைப் பணம் கொடுத்து வாங்க மக்கள் தயாரா என்ற பிரதான கேள்வி உள்ளது.

இது வரை காலமும் உரமானியம் வழங்குவோம் என்ற வாக்குறுதிதான் தேர்தல் காலங்களில் பிரதான கட்சிகளின் மிக முக்கிய வாக்குறுதியாக இருந்து வந்தது.

ஏன், 2005 ஜனாதிபதித் தேர்தலில் உரமானிய விவகாரம்தான் பிரதான பேசுபொருள். விவசாயிகளுக்கான உரமானியத்தை ரணில் பறிக்கப்போகின்றார், நான் தாராளமாக அதனை வழங்கி, விவசாயிகளின் கைகளைப் பலப்படுத்துவேன் என்றுதான் மஹிந்த ராஜபக்ஷவின் ‘மஹிந்த சிந்தனை’ தேர்தல் விஞ்ஞாபனம் தெரிவித்தது. அதன்படி தாம் ஆட்சிக்கு வந்ததும் உரமானியத்தைத் தாராளமாக வழங்கினார் மஹிந்தர். சில வகை உரங்களுக்கு 65 வீதத்துக்கு மேல் கூட மானியம் வழங்கப்பட்டது. அதாவது நூறு ரூபாவுக்கு இறக்குமதி செய்யப்படும் சேதன / அசேதன உரங்கள் வெறும் 35 ரூபாவுக்கு மானிய அடிப்படையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

‘மஹிந்த சிந்தனை’ மூலம் மஹிந்தர் வரை அனைத்து நாட்டுத் தலைவர்களும் மாறி மாறிப் போட்டி போட்டு வழங்கிய உரமானியத்துக்கு கோட்டாபய ராஜபக்ஷவின் ‘சுபீட்சத்தின் நோக்கு’ விஞ்ஞாபனம் நிரந்தரமாக ஆப்படித்திருக்கின்றது.

சேதன உரங்களுக்கும், பசுமைப் பயிர்ச் செய்கைக்கும் மட்டும்தான் இனி மேல் அரச மானியம். ஏனைய விவசாய முறைகளுக்கு அந்த மானியம் அடியோடு கிடையாது என அறிவித்திருக்கின்றார் நாட்டின் அதிஉத்தமர்.

விவசாயிகளுக்கு உரமானியம் வழங்குவதே வாக்கு வங்கி வேட்டைக்குத்தான்; வக்குகளைச் சூறையாடத்தான்.

இது விளங்காமல், பசுமை விவசாயம், கமத்தொழில் புரட்சி என்று புதிய தத்துவம் பேசமுற்பட்டு, கையைச் சுட்டுக் கொண்டிருக்கின்றார் அதி உத்தமர்.

இந்த விவகாரத்தில் அவர் படிப்பதற்கு இன்னும் பல பாடங்கள் உண்டு. அடுத்த மூன்றாண்டு ஆட்சிக்குள் அவற்றை எல்லாம் அவர் படிப்பார் என நம்பலாம்.

★ ★ ★

ஆஸ்திரேலியாவில் இருந்து நண்பர் ஒருவர் அழைப்பு எடுத்தார். கனடாவில் சுமந்திரன் பங்கு பற்றிய கூட்டத்தைக் குழப்பியவர்கள் தொடர்பில் செம கடுப்பில் இருந்தார். என்னிடம் ஒரு கோரிக்கையை முன்வைத்தார்.

“அந்தக் குழப்பத்தில் ஒரு பக்கம் சுமந்திரன். நிகழச்சியை ஏற்பாடு செய்தவர்களும் அவர் பக்கத்தில். அவர்களை எல்லோரையும் தெரிகின்றது.

“ஆனால் மற்றப் பக்கத்தில் ஒழுங்கற்ற வார்த்தைகளினால் பேசி, சத்தமிட்டு, மிக மோசமாக நடந்து கொண்டு குழப்பத்தை ஏற்படுத்தியவர்கள் யார் என்று மக்களுக்குத் தெரிய வேண்டாமா? முகக் கவசம் அணிந்த படி பலர் சத்தமிட்டமையால், யார் அவர்கள், சத்தமிட்டவர்கள் அவர்களா அல்லது வேறு யாருமா என்பவை வெளியே தெரியவரவில்லை. சுமந்திரனின் கூட்டத்தைக் குழப்பியமை தமது வீரசாதனை என்று உறுமும் இந்த சருகுப் புலிகளை – காட்போட் சண்டியர்களை – பெயர் விவரங்கள், அவர்களின் நிலைகள் குறிப்பிட்டு அம்பலப்படுத்தினால் என்ன? வரலாற்றில் இந்த ‘வீரசாதனை’ செய்தவர்களின் விவரப் பதிவுகள் இருக்க வேண்டாமா? பகிரங்கமாகத் தமது வீராவேஷ நடவடிக்கை – பெருஞ்சாதனை – என்று முழக்கமிடும் அவர்கள் கூட தங்கள் விவரங்கள் வெளியாவதை ஆட்சேபிக்க மாட் டார்கள்.

“இது உங்கள் வரலாற்றுக் கடமையும் கூட. கூட்டத்தைக் குழப்பியவர்கள் பற்றிய வீடியோக்கள், ஆதாரங்கள் தாராளமாக உண்டு. தயவு செய்து அவற்றை சேகரித்து, கனடாவில் உள்ள தரப்புகள் மூலம் ஒவ்வொருவரையும் அடையாளம் கண்டு, அவர்களின் பெயர் விவரங்கள், கனடா முகவரி, அங்குள்ள அவர்களின் அந்தஸ்து நிலைமை, ஊரில் அவர்களது இடங்கள் போன்றவற்றை விவரமாகக் பெற்று பிரசுரியுங்கள்...” – என்றார் அவர்.

நியாயமான கோரிக்கை. அன்றைய அட்டகாசக்காரர்களுக்கு மகுடம் சூட்ட இது அவசியமானது. கனடாத் தரப்புகள், அன்றைய அநீதிக்கு நீதி செய்ய வேண்டும், இவ்விடயத்தில் தங்கள் சுயகடப்பாட்டை நிறைவு செய்ய வேண்டும் என்று எண்ணினால் இத்திட்டத்துக்கு உதவலாம்.

கனடா வாழ் தமிழர்களின் கருத்து நிலைப்பாட்டையும் ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கின்றோம்.

– மின்னல் –

## 23 பேர் மரணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இவ்வாறு உயிரிழந்துள்ளவர்களில் 11 ஆண்களும், 12 பெண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதில் 30 வயதுக்குட்பட்டவர்களில் ஆண் ஒருவரும், 30 தொடக்கம் 59 வயதுக்கிடைப்பட்டவர்களில் ஓர் ஆணும் 3 பெண்களுமாக 4 பேரும், 60 வயதுக்கு மேற்பட்டவரில் 9 ஆண்களும் 9 பெண்களுமாக 18 பேரும் அடங்குகின்றனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 205 ஆக உயர்வடைந்துள்ளது.

## மாகாண சபை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்ற விடயம் சிறப்பு. ஆனால், 9 மாகாண சபைகளில் ஒன்பது சட்டங்கள் உள்ளன. மத்திய அரசிடம் ஒரு சட்டம் உள்ளது. இது பொருத்தமற்ற நடவடிக்கை. எனவே, புதிய அரசமைப்பின் ஊடாக அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயங்கள் இடம் பெற வேண்டும்.

மாகாண சபை முறைமை வேண்டாம். அது நாட்டுக்கு பாரம் – என்றார்.

## கிண்ணியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சிறிதரன் இந்த அனர்த்தம் தொடர்பில் சுட்டிக்காட்டி உரையாற்றியிருந்தார்.

அத்தோடு யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சிப் பகுதிகளில் பாடசாலை மாணவர்கள் விபத்தில் பாதிக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பிலும் சபையின் கவனத்துக்குச் சிறிதரன் எம்.பி. கொண்டு வந்திருந்தார்.

# யாழ். மேயர் மணிவண்ணன் தலைமையில் விசேட கூட்டம்

யாழ்ப்பாணம் – ஸ்ரான்லி வீதி புனரமைப்பு தொடர்பாக மாநகர மேயர் வி. மணிவண் ணன் தலைமையில் மாநகர சபையில் நேற்று விசேட கூட்டம் நடைபெற்றது.

இதில், யாழ்.மாநகர சபையின் ஆணையாளர், பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, நீர் வழங்கல் வடிகால மைப்புச் சபை, இலங்கை மின்சார சபை, இலங்கை ரெலிகொம் ஆகியவற்றின் பொறியியலாளர்கள் மற்றும் அதிகாரிகளும், ஸ்ரான்லி வீதி புனரமைப்பு செய்யும் ஒப்பந்தகார நிறுவனத்தினரும், நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் ஒப்பந்தக்கார நிறுவனத்தினரும் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில், மேற்படி திட்டத்தை வரும் ஆண்டு பெப்ரவரி மாதத்துக்குள் முடிவுறுத்திக் கொள்வதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் எனவும், பொதுமக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படுவதைக் குறைத்து வேகமாக செய்து முடிப்பது எனவும் இணக்கம் காணப்பட்டது.

ஸ்ரான்லி வீதியானது இருபக்கமும் வாகனத்தரிப்பிடம், வாய்க்கால், நடைபாதை, சுற்றுவட்டம் ஆகிய அம்சங்களை உள்ளடக்கியவாறு புனரமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நினைவு கூரலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கையில் மனித உரிமைகள் நிலைவரம் மிகவும் மோசமான கட்டத்தை நோக்கிச் செல்வதையும், எதிர்காலத்தில் மோசமான மனித உரிமை மீறல்களுக்கான ஆபத்து நிலைமை இருகின்றமையையும் கடந்த வருடத்தின் அங்குள்ள போக்குகள் சுட்டி நிற்கின்றன என்று 2021 ஜனவரியில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகம் இலங்கை தொடர்பாக விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

“மனித உரிமைகள் ஆர்வலரைத் தொடர்ந்து கண்காணித்து அச்சுறுத்துவது, பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பிரயோகித்து கண்மூடித்தனமாக அவர்களைக் கைது செய்வது என்று பாதுகாப்புப் படைகள் தமது நடவடிக்கைகளை அதிகரித்துள்ளன.

“நீதிமன்ற அவதானிப்பு அல்லது நீதிமன்றத்தின் அடுத்த கட்ட நடவடிக்கைக்கு இடமளிக்காமல், தனி நபர்களைத் தம் பாட்டில் கைது செய்து, மறுவாழ்வு மையங்களுக்கு அனுப்பும் அதிகாரங்களுடன் புதிய விதிமுறைகளை அரசு பிரேரித்துள்ளது.

“கொலைக் குற்றத்துக்காக மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதி ஒருவருக்கு அரசு மன்னிப்பு அளித்து அவரை விடுவித்துள்ளது.

“காணாமல் போனோர் அலுவலகம் போன்ற ஒரு நிறுவனத்தின் தலைமைப் பதவிக்கு சர்ச்சைக்குரிய ஒருவரை அரசு நியமித்துள்ளது.

“மனித உரிமைகள் சம்பந்தமான வெளிப்டையான வழக்குகளில், பொறுப்புக் கூறலைத் தடுப்பதற்கான திட்டமிட்ட நடவடிக்கைகளை அரசு ஆரம்பித்துள்ளது.

“சட்டத்தின் காவலில் இருந்த பலர் கொல்லப்பட்டுள்ளனர். அவற்றில் சட்ட விரோதமான படுகொலைகளுக்கான தாராளமன அடையாளங்கள் இருக்கின்றன என இலங்கை சட்டத்தரணிகள் சங்கமே தெரிவித்துள்ளது.

“தமிழ், முஸ்லிம் நல அமைப்புகள் உட்பட பல தரப்புகளைத் தடை செய்வதன் மூலமும் –

“நினைவுகூரல் நிகழ்வுகளை – குறிப்பாக வடக்கு, கிழக்கு சமூகங்களிடையே – செய்ய விடாமல் தடுப்பதன் மூலம் –

“சிறுபான்மைக் குழுமங்களை பிரித்து ஒதுக்கும் அரசின் நடவடிக்கை தொடருகின்றது.”

– இவ்வாறு பிரிட்டனின் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அலுவலகம் சமர்ப்பித்துள்ள – இலங்கை தொடர்பான – 2021 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களுக்கான – அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொரோனாவிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எனக்கு ஆறுதல்களையும், ஆலோசனைகளையும் தெரிவித்து, மத வழிபாடுகளிலும் ஈடுபட்டு, அன்பையும், நம்பிக்கையையும் நேரடியாகவும், ஊடகங்கள், தொடர்பு சாதனங்கள் மூலமாகவும் தெரிவித்த கட்சி, கூட்டணி, நண்பர்கள், ஆதரவாளர்கள், அரசியல் பிரமுகர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் வாழும் அன்புள்ளங்கள் அனைவருக்கும் எனது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன் – என்று கூறினார்.

## நேற்று மட்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 59 ஆயிரத்து 605 ஆக எகிறியுள்ளது.

இவர்களில் 17 ஆயிரத்து 471 பேர் சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அதேவேளை கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 401 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 27 ஆயிரத்து 929 ஆக அதிகரித்துள்ளது.

## டக்ளஸுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூறியதாவது:–

போதைப்பொருளால் வடக்கு, கிழக்கில் எமது சமூகம் மிகவும் மோசமாகப் பாதிக்கப்படுவது தொடர்பில் சிறிதரன் எம்.பி. கருத்து வெளியிடுகையில், அந்த உண்மையை சகித்துக்கொள்ள முடியாத இராணுவத் துணைக்குழுவின் தலைவர், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பொய்யான கருத்தை முன்வைத்தார்.

எங்களுடைய தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் காலத்தில் போதைப்பொருள் வியாபாரம் நடந்தது எனக் கூறுகின்றார். இதனை மறுக்கின்றேன். பிரபாகரனின் ஒழுக்கம் தொடர்பில் சரத் பொன்சேகா, கமல் குணரட்னம் போன்றவர்களே தெளிவாகக் கூறியுள்ளனர். எனவே, அவர்களிடம் கேட்டாவது டக்ளஸ் கற்றுக்கொள்ள வேண்டும் – என்றார்.

## ‘எமது தேசியத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பெரும்பான்மை இன உறுப்பினர்கள் சபையில் வலியுறுத்தினர்.

எனினும், சபைக்குத் தலைமை தாங்கிய எம்.வேலுகுமார் எம்.பி., நாடாளுமன்ற உறுப்பினருக்கு இருக்கின்ற கருத்துரிமையை இல்லாது செய்ய முடியாது என்றும், இந்த விடயத்தை சபாநாயகரின் கவனத்துக்குக் கொண்டு செல்வதாகவும் கூறினார்.

## தோல்விப் பயத்தால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாகாண சபைத் தேர்தல் சட்டத்தை திருத்துவதற்கு நாம் முழு ஒத்துழைப்பையும் வழங்குவோம். எமது பக்கத்தில் தவறு இடம்பெற்றதுதான். அது சரி செய்யப்பட வேண்டும். அதற்கான ஆதரவை நாம் வழங்குவோம். எனவே, எமது தவறை மட்டும் சுட்டிக்காட்டிக்கொண்டு தேர்தலை இழுத்தடிக்க வேண்டாம். இரு வருடங்கள் தவறை மட்டும்தான் கூறிக்கொண்டிருக்கின்றீர்கள்.

அதேபோல் உள்ளூராட்சி சபைத் தேர்தலையும் இரு வருடங்களுக்கு ஒத்திவைப்பதற்கு அரசு முயற்சிக்கின்றது – என்றார்.

# வெற்று அறிக்கை விடுவது மட்டும் அரசியலல்ல தூரநோக்கில் திட்டங்களை வகுக்கவேண்டும்

## அமைச்சர் வியாழேந்திரன் அறிவுரை

(கலையமுதன்)

யாழ்ப்பாணம்,நவ.25

பேசிக்கொண்டும் வெற்று அறிக்கை வெளியிடுவது மட்டும் அரசியல் அல்ல. ஒரு சமூகத்துக்குத் தேவையான அத்தனை துறையிலும் வளர்ச்சிகளை ஏற்படுத்த வேண்டும். தூரநோக்குடன் திட்டங்களை வகுக்க வேண்டும்.அடுத்த தலைமுறையாவது நல்ல நிலைமையில் இருக்க வேண்டுமென, பின்தங்கிய கிராமிய அபிவிருத்தி மனைசார் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.

தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு விதை பொதிகள் வழங்கும் நிகழ்வின் போது உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கை வரலாற்றிலே முன்வைக்கப்பட வரவு - செலவுத் திட்டம் என்றவகையிலே இம்முறையே விவசாயம், நீர்ப்பாசனம், கிராமிய பொருளாதார அபிவிருத்திக்கு அதிகளவான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் 25 மாவட்டங்களில் உள்ள அத்தனை பிரதேச செயலகங்கள், கிராம சேவகர் பிரிவுக்கும் இந்த நிதி சமமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்த நிதியைக் கொண்டு சேர்க்க வேண்டிய பொறுப்பு வடக்கு கிழக்கு மாகாண மக்கள் பிரதிநிதிகளுக்கு இருக்கின்றது.

எங்களுக்கு உரிமை கிடைத்தால் போதும் அதன் பின்னர் எல்லாம் கிடைக்கும் என சிலர் கூறுகின்றனர். ஆனால் வளர்ச்சி என்பது எல்லா வகையிலும் நமக்குக் கிடைக்க வேண்டும்.

அம்பாறை மாவட்டத்தில் தமிழரின் இருப்பு என்பது கேள்விக்குறியாகி இருக்கின்றது. திருகோணமலையில் ஓர் ஆசனம் தான் கிடைக்கின்றது இன்னும் சில வருடங்களில் அதுவும் கிடைக்குமா என்பது கேள்விக்குறி.

பேசிக்கொண்டும் வெற்று அறிக்கை வெளியிடுவது மட்டும் அரசியல் அல்ல. ஒரு சமூகத்துக்குத் தேவையான அத்தனை துறையிலும் வளர்ச்சிகளை ஏற்படுத்த வேண்டும். தூரநோக்குடன் திட்டங்களை வகுக்க வேண்டும். அடுத்த தலைமுறையாவது நல்ல நிலைமையில் இருக்க வேண்டும்.

போராட்ட அரசியலை நாம் கொச்சைப்படுத்த மாட்டோம். அது உயர்ந்த நோக்கில் இடம்பெற்றது. அடுத்ததாக எதிர்ப்பு அரசியல், நாங்கள் எதைச் செய்தாலும் எதிர்ப்போம் என்ற அரசியல் காணப்படுகிறது. அதனால் எதையும் சாதிக்க முடியாது. முள்ளிவாய்க்கால் யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்னர் சரியான காய் நகர்த்தல்கள் மேற்கொள்ளப்படவில்லை. நான் உட்பட 16 பேர் நல்லாட்சி அரசாங்கத்துக்கு ஆதரவாக இருந்தோம். ஆனால் எதுவுமே நடக்கவில்லை. நீண்ட காலத் தீர்வு விடயங்களிலும் நாம் சாதிக்கவில்லை. அபிவிருத்தி விடயங்களையும் நாம் பெற்றுக் கொடுக்கவில்லை. காற்றுள்ள போதே தூற்றிக் கொள் என்று சந்தர்ப்பத்தை நாம் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். - என்றார்.

இந்நிகழ்வுக்குப் பின்னர் நினைவேந்தல் தொடர்பாக நீதிமன்றத் தடையுத்தரவு பெறப்படுகின்றமை தொடர்பாக ஊடகவியலாளர்கள் இராஜாங்க அமைச்சரிடம் கேள்வி எழுப்பிய பொழுது, யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள்,



இழப்புகளை சந்தித்தவர்கள் சட்டத்துக்கு உட்பட்டு வீடுகளில் அனுஷ்டிக்க முடியும். அவர்களுக்கு நாங்கள் இந்த இடத்திலே ஆறுதல் சொல்ல விரும்புகிறேன். - என்றார்.

# சுபீட்சத்தின் நோக்கு தேசிய கொள்கை திட்டத்தில் யாழில் பயனாளிகளுக்கு பயறு, உழுந்து விதைகள்

## அமைச்சர் வியாழேந்திரன் வழங்கினார்

(கலையமுதன்)

யாழ்ப்பாணம்,நவ.25

தெரிவுசெய்யப்பட்ட விவசாயிகளுக்கு பயறு மற்றும் உழுந்து விதை பொதிகள் வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நேற்று (புதன் கிழமை) இடம்பெற்றது.

நாட்டை கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு தேசிய கொள்கை திட்டத்திற்கமைய, பின்தங்கிய கிராமிய அபிவிருத்தி மனைசார் கால்நடை வளர்ப்பு மற்றும்சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் வழிகாட்டலில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உழுந்து மற்றும் பயறு பயிர்ச்செய்கைத் திட்டத்தின் ஒரு கட்டமாக நேற்று காலை 9.30 மணியளவில் விதை பொதிகள் வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

யாழ் மாவட்டம் முழுவதும் 80 லட்சம் ரூபா ஒதுக்கீட்டில் 469 கிலோ பயறு 546 பயனாளிகளுக்கும் 3 ஆயிரத்து 263 கிலோ உழுந்து 903 பயனாளிகளுக்கும் 1,632 கிலோ இஞ்சி 64 பயனாளிகளுக்கும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன், பின்தங்கிய கிராமிய அபிவிருத்தி மனைசார் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், இராஜாங்க அமைச்சின் செயலாளர் அமல் ஹர்ஷ த சில்வா, மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பிரதீபன், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்(காணி) முரளிதரன், யாழ்.மாவட்ட விவசாயப் பணிப்பாளர் கைலேஸ்வரன், விவசாயத் திணைக்கள அதிகாரிகள், கமநல சேவை உத்தியோகத்தர்கள், விவசாயிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.


# பருத்தித்துறை நகரசபை மீள்கேள்வி அறிவித்தல் - 2022

**மீன் சந்தை, ஆட்டிறைச்சிக்கடை, மாட்டிறைச்சிக்கடை, ஆகியவற்றிற்கான குத்தகை மீள்கேள்வி அறிவித்தல்.**

பருத்தித்துறை நகரசபையின் எல்லைக்குட்பட்ட கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்ட நிலையங்களை 01.01.2022 இலிருந்து 31.12.2022 வரையான காலப்பகுதிக்கு நடாத்துவதற்கான குத்தகை கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் கடைசித் திகதி: 08.12.2021 பி.ப. 02.30 மணி

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி: 09.12.2021 பி.ப. 02.30 மணி

கேள்வி திறக்கப்படும் திகதி: 09.12.2021 பி.ப. 02.30 மணி

கேள்வி திறக்கப்படும் இடம்: பருத்தித்துறை நகரசபை அலுவலகம்.

| தொ - இல | குத்தகை விபரம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வரிகள் நீங்கலாக) | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | மீளளிக்க முடியாத கேள்விப் படிவக் கட்டணம் (வரிகள் நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 01 | மீன் சந்தை | 3,371,000.00 | 20,000.00 | 1000.00 |
| 02 | ஆட்டிறைச்சிக் கடை | 62,100.00 | 5,000.00 | 1000.00 |
| 03 | மாட்டிறைச்சிக் கடை | 2,411,140.00 | 20,000.00 | 1000.00 |

1. விண்ணப்பப் படிவங்களினை 25.11.2021 தொடக்கம் 08.12.2021 திகதி பி.ப.2.30 மணி வரை அலுவலக நாட்களில் கடமை நேரத்தில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்..
2. ஏனைய விபரங்களை 03.11.2021 ஆந் திகதிய தினக்குரல் மற்றும் காலைக் கதிர் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட பருத்தித்துறை நகரசபையின் கேள்வி அறிவித்தல் 2022 இல் பார்வையிடவும்.
3. மேலதிக விபரங்கள் மற்றும் 2022 மீள்கேள்வி அறிவித்தல் நிபந்தனை கையேட்டினை அலுவலக நாட்களில் கடமை நேரத்தில் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**திரு.யோசேப்பு இருதயராசா,**
**திகதி : 25.11.2021**
**தவிசாளர்**
**பருத்தித்துறை நகரசபை,**


# நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்களுக்கே 3 ஆவது டோஸ் தடுப்பூசி வழங்கப்படுகிறது

## மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் தகவல்

(கலையமுதன்)

யாழ்ப்பாணம்,நவ.25

கொவிட் 19 தடுப்பூசி வழங்கல் திட்டத்தின் கீழ் நோயெதிர்ப்பு சக்தி குறைந்தவர்களுக்கும் அதிக ஆபத்துள்ள நோய் நிலைமையுடைய 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் மூன்றாவது தடவையாக கொவிட் - 19 தடுப்பூசி மேலதிகமாக இவ்வாரம் முதல் வழங்கப்பட உள்ளதென வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ் மாவட்ட செயலகத்தில் கொரோனாத் தொற்று மற்றும் டெங்கு ஒழிப்பு தொடர்பான கூட்டத்துக்கு பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - மேற்குறிப்பிட்ட நோய் நிலைமையுடைய 20 வயதுக்கு மேற்பட்டவர்களில் ஏற்கனவே சினோபோர்ம் கொவிட் - 19 தடுப்பூசியின் இரண்டாவது தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டவர்கள் அந்தத் தடுப்பூசியைப் பெற்ற நாளிலிருந்து ஆகக்குறைந்து ஒரு மாத இடைவெளியின் பின் இந்தத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளலாம்.

சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்புப் பிரிவின் வழிகாட்டல்களுக்கு அமைவாக வடமாகாணத்தில் யாழ். மாவட்டத்தில் யாழ்.போதனா வைத்தியசாலை மற்றும் பருத்தித்துறை, ஊர்காவற்றுறை, தெல்லிப்பழை, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைகளிலும், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள மாவட்ட பொது வைத்தியசாலைகளிலும் இந்தத் தடுப்பூசிகள் வழங்கப்பட உள்ளன.

நோய் நிலைமையால் அல்லது அதற்கு பெற்றுக்கொண்ட சிகிச்சையினால் நோயெதிர்ப்பு சக்தி குறைந்தவர்கள், நாள்பட்ட சிறுநீரக நோயுடையவர்கள், உறுப்பு மாற்று (உதாரணமாக சிறுநீரகம், ஈரல், சுவாசப்பை) மற்றும் என்புமச்சை மாற்று சத்திரசிகிச்சைக்கு உட்பட்டவர்கள், புற்றுநோயுடையவர்கள் மற்றும் புற்றுநோய்க்கு தற்போது சிகிச்சை பெற்றுக்கொண்டிருப்பவர்கள், மண்ணீரல் தொழிற்பாடு குறைந்தவர்கள் அல்லது நோய்நிலையின் நிமித்தம் மண்ணீரல் அகற்றப்பட்டவர்கள், வைத்தியரால் நோயெதிர்ப்பு சக்தி குறைந்தவர்களென பரிந்துரைக்கப்பட்டவர்கள் என 20 வயதுக்கு மேற்குறிப்பிட்ட நோய்நிலைமை உடையவர்கள் மூன்றாவது தடவை மேலதிக தடுப்பூசி பெற்றுக்கொள்ள முன்னுரிமை உடையவர்கள் ஆவர்.

எனவே, மேற்குறிப்பிட்ட தேவையுடையவர்கள் ஏற்கெனவே தடுப்பூசி ஏற்றப்பட்ட அட்டை மற்றும் மருத்துவ அறிக்கையுடன் தமக்கருகிலுள்ள குறிப்பிடப்பட்ட வைத்தியசாலைகளில் மூன்றாவது தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள முடியும். - என்றார்.

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# அமெரிக்காவின் கட்டியம்

வொஷிங்டனுக்கு சென்றிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சட்ட நிபுணர்கள் – உலகத் தமிழர் பேரவையின் பிரதிநிதிகள் குழுவினரைச் சந்தித்த பின்னர் அமெரிக்கத் தரப்பிலிருந்து வெளியிடப்பட்ட செய்தி பலரினதும் அவதானத்தையும் ஈர்த்துள்ளது.

மேற்படி தமிழர் தரப்பினர் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் (வெளிவிவகார அமைச்சில்) பல பிரமுகர்களையும் சந்தித்துப் பேசினர். அவற்றை ஒட்டி இராஜாங்கத் திணைக்களத்தின் பல பிரிவுகள் பல டுவிட்டர் செய்திகளை வெளியிட்டிருந்தன.

எனினும், அந்தச் சந்திப்புகளின் வரிசையில் கடந்த திங்களன்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் மத்திய மற்றும் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான உதவிச் செயலாளர் டொனால்ட் லூ மற்றும் அவரது உதவியாளர் கெலி அம்மையார் ஆகியோரோடு அவர்கள் நடத்திய கலந்துரையாடலே முக்கியமானது.

அமெரிக்க அரசின் தரப்பில், இலங்கை தொடர்பான வெளிவிவகார விடயங்களைக் கையாளும் மையம் இதுதான். ரிச்சர்ட் பவுச்சர், றொபேர்ட் ஓ பிளேக், நிஷா தேசாய பிஸ்வால் போன்ற அதிகாரிகள் முன்னர் இலங்கை விவகாரத்தைக் கையாண்ட பதவியில்தான் இப்போது டொனால்ட் லூ இருக்கின்றார்.

தமிழர் தரப்புடனான பேச்சுக்களை அடுத்து டொனால்ட் லூவின் அலுவலகம் விடுத்த டுவிட்டர் குறிப்பு ஒரு சில வார்த்தைகளைத் கொண்ட வாசகம் எனினும், அதில் அர்த்தங்கள் அதிகம் பொதிந்துள்ளன என்பது கவனிக்கத்தக்கது.

"இலங்கை தொடர்பான அமெரிக்க வெளிவிவகாரக் கொள்கையைத் தீர்மானிப்பதில் மனித உரிமைகள் விவகாரமே மையப் பொருளாக இருக்கின்றது" – என்பது இதில் முதல் விடயம்.

மனித உரிகைள் விவகாரம் என்று அமெரிக்கா குறிப்பிடுவது இப்போது இடம்பெறுகின்ற அல்லது இனிமேல் இடம்பெறக் கூடிய மனித உரிமைகள் விவகாரங்கள் மட்டுமல்ல, முன்னர் நடந்த விடயங்களின் பொறுப்புக் கூறலையும் உள்ளடக்கியதுதான் என்பது வெள்ளிடைமலை.

இது புதிய விடயமல்ல, யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் (இவற்றில் யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரன கொடூரங்கள் போன்றவையும் அடங்கும்) பொறுப்புக் கூறல் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதை கடந்த பல ஆண்டுகளாகத் தனது மாறா நிலைப்பாடாக அமெரிக்க வெளிப்படுத்தி, வலியுறுத்தி வருகின்றது.

அடுத்த விடயம்தான் முக்கியம்.

"நிலையான தீர்வைத் தேடுவதிலிலும் மற்றும் தங்களின் நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதிலும் முழுக் குரல் கொடுக்கும் விடயத்தில் இலங்கைத் தமிழர்களோடு அமெரிக்கா இணைக்கின்றது." – என்பது ஆழ்ந்த அர்த்தங்கள் பொதிந்த – புதிய கொள்கை நிலைப்பாட்டு வெளிப்படுத்துகையாகும்.

நிலையான தீர்வைத் தேடுவதற்கும் –

நாட்டின் எதிர்காலத்தை தமிழர்களும் சேர்ந்து தீர்மானிப்பதற்கும் –

தமிழர்களோடு இணைந்து அமெரிக்கா நிற்கும் என்பது இந்த டுவிட்டர் செய்தியின் உள்பொருளாக இருக்கின்றமை அவதானிக்கத்தக்கது.

இலங்கைத் தீவில் தமிழர்களுக்கு நீதி, நியாயமான, நிரந்தரமாக நிலைத்து, நீடிக்கக் கூடிய தீர்வு ஒன்றைத் தமிழர்களுக்குப் பெற்றுக் கொடுக்கும் விடயத்தில் தான் நேரடியாக சம்பந்தப்படப் போகின்றது என்பதற்கு அமெரிக்க கட்டியம் கூறுவதாக இதனை எடுத்துக் கொள்ளலாம்.

இந்த விடயத்தில் அமெரிக்க – இந்திய கூட்டுப் பங்களிப்பு ஒன்றே இன்றைய நிலையில் இலங்கைத் தமிழர்களுக்குக் கிடைக்கக்கூடிய ஒரே கொழுகொம்பாகும்.

# வவுனியா பொது வைத்தியசாலையில் சுகாதாரப் பிரிவினர் பணிப்பகிஷ்கரிப்பு





வவுனியா வைத்தியசாலையில் தாதியர்கள், சுகாதாரப்பிரிவினரின் பணிப் பகிஷ்கரிப்பு காரணமாக நோயாளிகள் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர்.

வைத்திய சேவை தவிர்ந்த, தாதியர் உள்ளிட்ட 15 சுகாதார தொழிற்சங்கங்கள் நேற்று (புதன்கிழமை) காலை 7 மணி முதல் 48 மணிநேர பணிப் பகிஷ்கரிப்பை முன்னெடுத்தன. எதிர்வரும் இரண்டு தினங்களுக்கு இந்த பணிப் பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்படுகின்றது. இதன் காரணமாக வவுனியா பொது வைத்தியசாலையில் தாதியர்கள் மற்றும் ஏனைய சுகாதாரப் பிரிவினர் கடமைக்கு சமுகமளிக்காமையால் நோயாளிகள் பெரும் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர்.

குறிப்பாக நேற்று அதிகாலை தொடக்கம் சீரற்ற காலநிலை காரணமாக பெரும் மழை பெய்துவரும் நிலை யில் மழையையும் பொருட்படுத்தாது வைத்தியசாலைக்கு பல்வேறு மருத்துவ தேவைக்காக வந்த நோயாளிகள் மிகுந்த ஏமாற்றத்துடன் திரும்பிச்சென்றமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இதேவேளை, 7 கோரிக்கைகளை முன்வைத்துப் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சட்டவிரோத தொழில் நடவடிக்கையில் ஈடுபட்ட மூவர் முல்லைத்தீவில் கைது

முல்லைத்தீவு, கொக்குளாய் கடற்பகுதியில் சட்டவிரோத கடற்தொழில் நடவடிக்கையில் ஈடுபட்ட இருவர் மற்றும் அதே பகுதியில் சட்டவிரோத மதுபானம் தயாரித்த ஒருவர் என மூவர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

முல்லைத்தீவு கொக்குளாய் கடற்பரப்பில் கடந்த செவ்வாய்க்கிழமை சட்டவிரோதமான முறையில் வெடிபொருள் பாவித்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட மீனவர், இருவரை கொக்கிளாய் கடற்படையினர் கைது செய்தனர்.

புல்மோட்டை பகுதியைச் சேர்ந்த இரு மீனவர்களே இவ்வாறு கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, முல்லைத் தீவு கடற்தொழில் நீரியல் வளத்திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

வெடிமருந்து பயன்படுத்தி பிடிக்கப்பட்ட மீன்கள் கடற்தொழில் நீரியல் வளத்திணைக்களத்தால் எடுக்கப்பட்டு ஆய்விற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், இவர்கள் மீதான சட்ட நடவடிக்கையை முன்னெடுக்கும் நடவடிக்கையில் கடற்தொழில் நீரியல்வளத் திணைக்களம் ஈடுபட்டுள்ளது.

இதேவேளை கொக்குளாய் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மதுபான தயாரிப்பு இடம் ஒன்று சிறப்பு அதிரடிப்படையினரால் முற்றுகையிடப்பட்டு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொக்குளாய் பகுதியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சட்டவிரோத மதுபானம் தயாரிப்பிற்குப் பயன்படுத்தப்பட்ட பொருள்கள் மீட்கப்பட்டுள்ளமையுடன் 256 லீற்றர் கசிப்பும், 360 லீற்றர் கோடாவும் மீட்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட நபரையும், சான்று பொருள்களும் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# யாழில் காணியொன்றிலிருந்து பெருமளவு வெடிபொருள் மீட்பு

யாழ்ப்பாணம் - தென்மராட்சி வேம்பிராய் பகுதியில் உள்ள காணி ஒன்றிலிருந்து பெருமளவான வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

வேம்பிராயில் தனியார் ஒருவருக்குச் சொந்தமான காணியில் இந்த வெடிபொருள்கள் காணப்பட்டமையையடுத்து காணியின் உரிமையாளரால் பொலிஸார் ஊடாக இராணுவத்தினருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

கிடைக்கப்பெற்ற குறித்த தகவலின் அடிப்படையில் அப்பகுதிக்கு விரைந்த இராணுவத்தினர் அங்கிருந்த வெடிபொருள்களை மீட்டுச் சென்றுள்ளனர்.





காலைக்கதிர் Kalaikkathir

# ‘ஒரே நாடு; ஒரே சட்டம்’ என்ற திட்டத்தின் மூலம் சகலருக்கும் பொருளாதார சமத்துவம் ஏற்படும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நம்பிக்கை



‘ஒரே நாடு; ஒரே சட்டம்’ என்ற திட்டத்தின் மூலம் சகல மக்களும் அரசியல் சமூக பொருளாதார சமத்துவத்தை பூரணமாக அனுபவிக்கும் காலத்தை நாம் உருவாக்குவோம் என்று தெரிவித்துள்ள கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, காட்சிகளை நிறம் மாற்றி காட்டும் அரசியல் கண்ணாடிகளை கழற்றிவிட்டு நிஜங்களை பார்ப்பதற்கு முன்வர வேண்டும் என்று சகல அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வரவு – செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர் –

எத்தகைய தடைகளையும் சவால்களையும் அரசியல் குழப்பங்களையும் எதிர்கொண்டு, சமூக பொருளாதார அபிவிருத்தியைக் கட்டியெழுப்ப எமது ஆட்சி திடசங்கற்பம் பூண்டுள்ளது.

சகல இன மத சமூக மக்களும் சரிநிகர் சமன் என்ற சமத்துவ சிந்தனையை நடைமுறைப்படுத்தவே ‘ஒரே நாடு; ஒரே சட்டம்’ என்ற திட்டத்தை ஜனாதிபதி பிரகடனம் செய்திருக்கிறார்.

‘மருண்டவன் கண்ணுக்குஇருண்டதெல்லாம் பேய்’ என்பார்கள். அவ்வாறான நிலை மாறி, பரந்த வெளிச்சம் கூட மருண்டவன் கண்ணுக்கு பேயாக தெரியும் காலமாக இது மாறியிருக்கிறது.

எமது தேசத்தின் மக்களது ஆரோக்கியமான வாழ்க்கையை முன்வைத்து, ஜனாதிபதி எடுத்து வருகின்ற முயற்சிகளை நான் ஒரு மக்கள் நேய நோக்கமாகவே பார்க்கிறேன்.

இரசாயன உரம் மற்றும் விவசாய உள்ளீடுகள் மற்றும் சுத்தமற்ற குடிதண்ணீர் காரணமாக எமது நாட்டில் சுமார் 10 ஆயிரத்துக்கும் அதிகமான மரணங்கள் ஒரு வருடத்தில் ஏற்படுகின்றன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. சுமார் ஒரு லட்சத்து 25 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் சிறுநீரக நோயாளர்களாக மாறி வருகின்றனர் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒருபக்கத்தில் இத்தகைய நோய்களற்ற சமூகத்தை உருவாக்குவதற்கு இந்த இயற்கை உரப் பயன்பாடு வழிவகுப்பதுடன், மறுபக்கத்தில் அதிகளவிலான அந்நியச் செலாவணியை மீதப்படுத்தவதற்கும் எம்மால் இயலுமாகின்றது.

இத்தகைய முயற்சிகள் தேசிய உற்பத்தியை ஊக்கப்படுத்துவதற்கும் வழிவகுக்கின்றது என்பதையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். அதே நேரத்தில், சகல மக்களுக்கும் சுத்தமான குடிதண்ணீர்; என்ற திட்டமும் அதற்கான முன்னெடுப்புகளும் நோயற்ற நாடாக இலங்கையை உருவாக்கும்.

இந்த வரவு – செலவுத்திட்டத்தில் நில வேளாண்மைக்குப் போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது, இது விதைத்த நிலத்தை உழுது ஊருக்கும் பேருக்கும் படங்காட்டும் தேர்தல் நாடகம் அல்ல, உழைக்கும் உழவர்கள் தொழுதுண்டு வாழாமல் உழுதுண்டு வாழும் வாழ்வியல் உரிமைக்காகவே அந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

அதுபோல், நீர் வேளாண்மைக்குப் போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது, இது படகுச்சவாரி செய்து படங்காட்டி அரசியல் பிழைப்பு நடத்துவதற்காக அல்ல, நீர் வளங்கள் அனைத்தையும் தம் வாழ்வின் நலன்களுக்காக, நாட்டின் முன்னேற்றத்துக்காக எமது மக்கள் பயன்படுத்தி பயனுற வேண்டும் என்பதற்காகவே அந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

அரசியலில் மட்டுமன்றி அபிவிருத்தியிலும் சமத்துவம் கேட்டுத்தான் நாம் அன்று உரிமைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தோம். அந்த வகையில் எமது உரிமைப் போராட்ட வழிமுறையை மாற்றி தேசிய நல்லிணக்க பாதையில் பயணிக்கத் தொடங்கியிருந்தாலும் அபிவிருத்தியில் சமத்துவம் என்ற எமது எண்ணங்களும் ஈடேறியே வருகின்றன. தேசிய உற்பத்திகளை அதிகரிக்கக்கூடிய அனைத்து வழிகளையும் மேற்கொள்வதற்கும், அந்த உற்பத்திகளைத் தரமான உற்பத்திகளாக மேற்கொள்வதற்கும் நாம் முன்வர வேண்டும். – என்று தெரிவித்துள்ளார்.






# வவுனியாவில் கடும் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

வவுனியாவில் பெய்து வரும் கடும் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்துள்ளது.

இலங்கையின் தென்கிழக்குப் பகுதியில் வங்காள விரிகுடாவில் தாழமுக்கம் உருவாகியுள்ளது.

இதன் காரணமாக வடக்கு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் மழை பெய்யும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. இதனடிப்படையில் கடந்த செவ்வாய்க் கிழமை மாலையில் இருந்து வவுனியாவில் மழை பெய்து வருவதுடன் நேற்று அதிகாலை முதல் கடும் மழை தொடர்ச்சியாக பெய்து வருகின்றது. நிறைவடைந்த 24 மணி நேர காலப் பகுதியில் 61.1 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வவுனியா வளிமண் டலவியல் திணைக்களத்தின் அவதானிப்பாளர் தா.சதானந்தன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த சில தினங்களாக பெய்துவரும் மழையிலும் பார்க்க அதிக மழை வீழ்ச்சி நேற்று பதிவாகியுள்ளது. இந்தக் காலநிலை மாற்றம் இன்னும் சில தினங்கள் நீடிக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார் .

அதிக மழை காரணமாக தாழ்நிலப்பகுதிகளில் வெள்ளநீர் காணப்படுவதுடன், வீதிகளில் மக்கள் நடமாட்டமும் குறைவடைந்து இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன், பாடசாலைகளுக்கு மாணவர் வரவும் மிகவும் குறைவாகத்

# பிரபா போதைப்பொருள் வர்த்தகராம் டக்ளஸ் தெரிவிப்பு; சிறிதரன் ஆக்ரோஷம்



யுத்தம் முடிவிற்கு வந்த பின்னரே வடக்கில் போதைப்பொருள் பாவனை அதிகரித்ததாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் சபையில் கூறிய வேளையில் அதனை நிராகரித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் போதைப்பொருள் வர்த்தகர் எனக் கூறியுள்ளார்.

இதனையடுத்து இருவருக்கும் இடையிலான வாக்குவாதத்தில் நாடாளுமன்றம் பரபரப்பானது.

இந்தச் சந்தர்ப்பத்தில் அமைச்சர் டக்ளஸ் மேலும் கூறுகையில் –

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் ஒரு போதைப்பொருள் வியாபாரி. அவர் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டார். இது சிறிதரனுக்கு தெரியுமோ அல்லது மறைக்கிறாரோ தெரியாது எனக் குறிப்பிட்டுள்ளார்.

அவரது கருத்தால் ஆவேசமடைந்த சிறிதரன், 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் வடக்கில் கஞ்சா என்றாலே என்னவென்று எவருக்கும் தெரியாது. 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர்தான் இந்தப் போதைப்பொருள்கள் திட்டமிட்டு வடக்குக்குக் கொண்டுவரப்பட்டன. டக்ளஸ் தேவானந்தா போன்று அரசுக்குக் கால்கழுவிப் பிழைப்பு நடத்துகின்ற தேவை எமக்கில்லை. – என்றார்.

# புதையல் தோண்டிய நான்கு பேர் கைது

புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த நால்வரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பொலன்னறுவை, அரலங்கவில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வேஹெரகமவில பிரதேசத்தை சேர்ந்த 21, 26, 38, 59 வயதுகளையுடையவர்களே கடந்த செவ்வாய்க்கிழமை இரவு கைதுசெய்யப்பட்டுள்ளார்கள்.

இதன்போது புதையல் தோண்டுவதற்குப் பயன்படுத்திய பொருள்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே குறித்த நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# முட்டையும் விலை எகிறல்

சந்தையில் முட்டை ஒன்றின் விலை 25 ரூபாவாக உயர்வடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

கால்நடை தீவன பற்றாக்குறை காரணமாக இவ்வாறு விலை உயர்வடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# உரங்கள் இறக்குமதிக்கு தனியார்துறைக்கு அனுமதி

இரசாயன உரம், பீடைக் கொல்லிகள் மற்றும் திரவ உரங்களை இறக்குமதி செய்ய தனியார் துறையினருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய நேற்று (புதன் கிழமை) முதல் இதற்காக அனு மதி வழங்கப்பட்டுள்ளதாக விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

மேலும் இது தொடர்பான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியாகும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இரசாயன உரம், பீடைக்கொல்லி மற்றும் திரவ உரம் என்பவற்றை இறக்குமதி செய்வதற்கு தடை விதித்து வெளியிடப்பட்ட வர்த்தமானி ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம் - 202

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**517. தமிழ் மக்கள் பேசி முடிவெடுக்க வேண்டியவை எவை?**

நாட்டிலுள்ளோரும் புலம்பெயர் மக்களும் சேர்ந்து அவர்களது ஆராய்வில் ஏற்றுக்கொள்ளப்படும் அரசியல் தீர்வு பொதியின் இறுதி வடிவமே.

அதனுடன் இந்தத் தீர்வுப்பொதியை சர்வதேசநாடுகளுக்குப்பரப்புரைசெய்யத் தேவையான அதிகாரக் கட்டமைப்பு. அந்த அதிகாரக் கட்டமைப்பு தங்களுக்கான ஒரு வெளிநாட்டுக் கொள்கையை வகுத்தல் வேண்டும். அந்த கொள்கையைப் பிராந்தியங்களாக சர்வதேச நாடுகளிடையே பிரித்து, ஒவ்வொரு பிராந்தியத்துக்கும் அவர்களை அணுகக் கூடிய ஆளுமையுள்ள அனுபவசாலிகளைத் தெரிய வேண்டும். தற்பொழுது அப்படியான நிலை ஒன்றில்லாமல் பலரும் தங்கள் வழியிலேயே வாக்குப் பெட்டிகளை கவனத்தில் வைத்துத் தீர்வுகளும் அபிப்பிராயங்களும் சொல்லுகிறார்கள். இவர்களில் யாரையும் கட்டுப்படுத்தக் கூடிய ஆளுமையோ, ஒற்றுமையோ ஒருவரிடமும் கிடையாது. அதுதான் பலவீனம்.

**518. எதைத் தீர்வுப் பொதியாக தமிழ் மக்கள் பார்க்கவேண்டும்?**

எல்லாத் தரப்பினரும் இணைந்து யதார்த்தமான பொதியை ஆக்குதல் வேண்டும். அபிப்பிராயத்துக்காக தமிழ் மக்களின் கோரிக்கைகளைப் பார்த்ததால் சுதந்திர கால கோரிக்கைகளைத் தவிர்த்து, சோல்பரி அரசமைப்புச் சட்டம் இருந்த காலங்களிலிருந்தே சமஷ்டி கேட்கப்பட்டது. ஆனால் 1972 ஆம், 1978ஆம் ஆண்டு அரசமைப்புச் சட்டங்கள் ஒருநாடு, ஒரு ஆட்சி என்றே நிறைவேற்றப்பட்டன.

வட்டுக்கோட்டைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தமிழ் மக்கள், தங்களிடமிருந்து கவரப்பட்ட இறைமையை மீட்கத் தீர்மானித்தார்கள். அது சுதந்திர தமிழ் ஈழமாக அறிவிக்கப்பட்டது. அந்தப் போராட்டத்தின் விளைவாக இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு அரசமைப்புச் சட்டத்தில்13 ஆவது திருத்தம் இணைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து தமிழ் ஈழம் என அறிவிப்புக்கள் இருந்தாலும் 'தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்' என்ற கோரிக்கையே பதியப்பட்டது.



**519. வட கிழக்கின் இணைப்பையோ, அவை தனியான அலகாக அதிகாரம் செய்ய முடியுமென்பதையோ ராஜபக்ஷக்கள் ஏற்காது, யுத்தத்தினால் அந்தக் கோட்பாட்டையும், அதனை முன்னிறுத்திப் போராடியவர்களையும் அழித்தார்கள். அந்த அழிவுகளுக்குப் பின் தமிழ் மக்கள் தீர்வுப் பொதியாக எதைப் பார்க்க வேண்டும்?**

2011 இல் அமெரிக்காவோடு இருந்த ஒரு கருத்துக் கணிப்பில் சம்பந்தன், சுமந்திரன், மாவை சேனாதிராசா, சுரேஷ் பிறேமச்சந்திரன் ஆகியோர் பங்குபற்றினார்கள். அந்த பங்குபற்றலிலிருந்து தமிழ் மக்களை உள்ளடக்கிய அரசியல் தீர்வுஎதுவும்அமெரிக்காவால்வெளிப்படுத்தப்படவில்லை. பின்னர் 2015 இல் நல்லாட்சி அரசாங்கம் அமைந்தது. அதில் ஒற்றையாட்சிக்குள்ளோ அல்லது ஒரு நாட்டுக்குள்ளோ சமஷ்டியாகம் கருதக் கூடிய சரத்துக்குள் இருக்கக் கூடிய புதிய அரசமைப்புச் சட்டத்துக்கு ஏற்பாடு இருந்தது. அது நடைபெறவில்லை.



கோட்டா ஜனாதிபதியானார். ஒரே நாடு, ஒரே சட்டம் என்று புதிய அரசமைப்புச் சட்டம் பற்றியும் அதை விரைவாகக் கொண்டு வந்து, சிங்கள - பௌத்த மக்களின் மேலாதிக்க உரிமைகளை நிறுவுவேன் என அறிவிப்பு இருக்கிறது.

இந்த யதார்த்தமான அரசியல் களத்தில் தமிழ் மக்களுக்காக சமஷ்டி முன்வைக்கப்பட்டிருக்கிறது. அதற்கும் ஒருபடி மேல் போய் கூட்டாட்சி (Confederation) சமர்ப்பிக்கப்பட்டது. இனப்படுகொலை தமிழ் மக்கள் மேல் நடத்தப்பட்டதால் சர்வதேச சட்டங்களின் அடிப்படையில் பரிகார ரீதியாக தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்ற நிலைப்பாடும் உண்டு.

இவற்றில் உள்ளவற்றில் எவற்றைத் தீர்வுப் பொதியாக சர்வதேசத்துக்கு முன் அவர்கள் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் முன்வைப்பது என்றவற்றோடுதான் தமிழ் மக்கள் ஈடாட வேண்டும்.

இம்முறை சுமந்திரனோடு அமெரிக்கத் தரப்புடன் பேச்சுவார்த்தைகள் நடத்திய குழு அவர்களோடு ஓர் அரசியல் பொதியைப் பற்றிப் பேசியிருப்பார்களா?

அவற்றில் இதுவரை வெளிப்படைத் தன்மையில்லை. அமெரிக்கா தமிழ் மக்களது அரசியல் தீர்வென்ற அடிப்படையில் ஸ்ரீலங்கா நிலைமையைக் கருதுவதில்லை. இந்தியாவினூடாக மனித உரிமை மன்றின் 46/1 தீர்மானத்தில் அரசமைப்பின் 13 ஆம் திருத்தம் உள்ளடக்கப்பட்டுள்ளது. அவை அடிப்படையாகுமா என்பது அமெரிக்காவின் அபிப்பிராயம் வெளியான பின்தான் அறிந்து கொள்ளலாம். இடையில் சுமந்திரன் தமிழ் மக்களுக்கும் தனது கட்சிக்கும் தரும் தரவிலும்தான் தெரியவரும்.

பேச்சுவார்த்தைகள் நடத்திய அமெரிக்க திணைக்களங்களைக் கவனித்தால் மனித உரிமைகள் அடிப்படையில் ஸ்ரீலங்காவுக்கு மேலும் நெருக்கடிகளைத் தந்து, அவர்களை தங்களது சர்வதேச நிகழ்ச்சி நிரலுக்குள் அடக்குவதுதான் முக்கியமாக உள்ளது. அந்த நெருக்கடிக்கு முகம் கொடுக்க ஸ்ரீலங்கா உட்படும் போது தமிழ் மக்களும் பரிகார நீதிக்குப் போராட வேண்டும். அதனை இணைத்துக் கொள்ள வேண்டும்.

**520. மாகாணசபைத் தேர்தல் உடனடியாக நடத்தப்படவேண்டும் என அமெரிக்கா அழுத்தம் கொடுக்குமா?**

இந்தியா, கிட்டடியில் எவ்வளவோ அழுத்தம் கொடுத்தது. ஆனால் தொடர்ச்சியாக வந்த சிங்கள அரசுகள் எப்படி இதனைத் தீர்க்காமல் இழுத்தடிப்பதால் அதனை நீர்த்துப்போகச் செய்யலாம் என திட்டமிட்டார்களோ அவையே தொடரப்படுகின்றன. 1956இல் இருந்து ஆயுதப் போராட்டம் வரும்வரை பேச்சுவார்த்தைகள் என்ற உத்தியும் புதிய அரசமைப்புகளும்தான் மேற்கொள்ளப்பட்டன.

அதைப்பற்றி ஒன்றும் செய்யாமல் பேசிக் கொண்டிருப்பது பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தேவையற்ற நிலையைக் கொண்டுவரும். ரோமானிய தளபதி பேபியஸ் மக்ஸிமஸ் (Fabius Maximus) இந்த இழுத்தடிக்கும் தந்திரத்தை 200 கி.மு. எதிராக கார்த்தஜினியன் என்ற இன மக்களுக்குப் பாவித்து 'இழுத்தடிக்கும் மன்னன்' எனப் பெயர் பெற்றான். இழுத்தடிப்பது, இரண்டு பகுதிகளில் பலவீனமாக இருக்கும் பக்கத்தை சளைக்க வைத்து, நிராதரவற்று, இவற்றை எறிந்து விட்டு போய்விடலாம் என்ற நிலைக்குத் தள்ளும். அது தெரிந்தே தந்திரமாகப் பாவிக்கப்படுகின்றது.

சோல்பரி அரசமைப்புச் சட்டத்தின் 29 ஆம் சரத்தை நீக்க எவ்வளவு தந்திரமாக கோடீஸ்வரனது வழக்கை மீள ஆராயாமல், அதனைக் கிடப்பில் போட்டுத்



தனிச் சிங்கள சட்டத்தை 72ஆம் ஆண்டு அரசமைப்பில் உள்ளடக்கி 29ஆம் சரத்து அற்றதாகவும் அதனை ஆக்கினார். அதே பூர்வாங்கங்கள் 13 ஆம் திருத்தத்தை நீர்த்துப் போகச்செய்து புதிய அரசமைப்புச் சட்டத்தின் மூலம் அதை விலத்திவிட்டு சரத்துக்கள், மாகாண சபைகள் இல்லாத, பலம் வாய்ந்த ஒற்றை ஆட்சியை அமைக்க வழிவகுக்கலாம். தமிழ் மக்களுக்கு இருக்கின்ற நாடாளுமன்ற பிரதிநிதிகள் பலத்தோடு அப்படியான அரசமைப்புச் சட்டம் ஏற்படுவதை தடுக்க முடியாது.

அவைகளை முன்வைத்துத்தான் பிரதமர் மஹிந்த 'மக்கள் சார்பிலான பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சி நாட்டிற்குத் தேவை. இந்தக் கடினமான சூழ்நிலையில் அம்மக்கள் மீண்டெழக் கூடியதொரு பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். எதிர்க்கட்சிகளின் முன்மொழிவுகள் மற்றும் விமர்சனங்களுக்கு நாங்கள் உன்னிப்பாக செவிமடுத்தோம். சில விமர்சனங்கள் நியாயமற்றவை. சில விமர்சனங்களில் ஏதேனும் நியாயம்



இருப்பின் அவற்றை நாம் ஏற்றுத் திருத்திக் கொள்ள எந்த நேரத்திலும் தயாராக உள்ளோம். புதிய அரசமைப்பு வரைவு நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படும். அவற்றில் ஒன்றும் இரகசியமில்லை' என்கிறார்.

அந்தச் செய்தியில் வருவதை ஊகிக்கலாம். அதற்கு எதிராக தமிழ் மக்கள் எதிர்ப்புக் காட்டுவதைத் தவிர எதுவும் செய்வதற்கில்லை. ஜீ.எல். பீரிஸ் சொல்வதை இணைத்துப் பார்த்தால் அவற்றின் தாற்பரியம் தெளிவாகப் புரியும். புதிய தேர்தல்சட்டத்திருத்தங்கள் ஆக்கப்படாமல் மாகாண சபைத் தேர்தல்களை நடத்த முடியாது என்கிறார் அவர். அப்படித் தேர்தலைக் காலம் கடத்தும் நேரத்தில் புதிய அரசமைப்புச் சட்டமூலம் மாகாண அமைப்பு நிர்வாகம் அற்று சட்டமானால், இருக்கும் 13 ஆம் திருத்தமும் இல்லாமலாக்கப்படும்.

மஹிந்தாவின் வார்த்தைகளில் அவர் மக்கள் என்ற ஒருபொருள்பட அதனை சிங்கள, பௌத்த மக்களைக் குறிக்கின்றார். அன்றில் பன்முகங்கள் இல்லை. மக்கள் குழாம் ஒன்றே என்று தெரிவிக்கிறார். அத்தோடு சில விமர்சனங்கள் நியாயமற்றவை என்பதில், எவை நியாயமற்றவை எனவும் குறியீடுகள் தரப்படுகின்றன எனப் புரிந்து கொள்ளலாம். இவற்றைப் புரிந்து கொண்ட முன்னெடுப்பு தமிழ் மக்கள் மத்தியில் வரவேண்டும்.

(வளரும்......)

# கிளிநொச்சியில் தொடரும் வீதி விபத்துக்கள் உடன் நடவடிக்கை எடுத்து செயற்படுத்துக!

## வடக்கு ஆளுநருக்கு சிறிதரன் எம்.பி. கோரிக்கைக் கடிதம்



கிளிநொச்சி நகர்ப்பகுதியில் அண்மைக்காலமாக தொடர் வீதிவிபத்துக்கள் இடம்பெறுகின்றன. இதனால் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் என அனைவரும் பாதிக்கப்படுகின்றமை மிகவும் வேதனை தருகின்றது. கிளிநொச்சிப் பகுதியில் சரியான போக்குவரத்து ஒழுங்குகளை மேற்கொள்வதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

- இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநருக்குக் கோரிக்கை முன்வைத்துள்ளார் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன்.

அவரால் ஆளுநருக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

கடந்த 2021.11.15 ஆம் திகதி காலை, கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்துக்கு (தேசிய பாடசாலை) முன்பாக உள்ள பாதசாரிகள் கடவை மூலம் வீதியைக் கடக்க முற்பட்ட வேளை, வவுனியாவிலிருந்து கிளிநொச்சி நோக்கி வருகைதந்த அரச பஸ் கட்டுப்படுத்த முடியாத கடும்வேகத்தால், ஊற்றுப்புலம் பிரதேசத்தைச் சேர்ந்த பள்ளி மாணவியான செல்வி மதுசாளினி திருவாசகம் (வயது - 17) பலியானமையோடு, அவருடன் இணைந்து பயணித்த அதே பிரதேசத்தைச் சேர்ந்த பள்ளி மாணவியான செல்வி கீர்த்தனா சசிக்குமார் (வயது - 17) படுகாயமடைந்தமையை அனைத்துத் தரப்பினரிடையேயும், அதிலும் குறிப்பாக பெற்றோர்களிடையே ஆழ்ந்த துக்கத்தையும், அச்ச நிலையையும் தோற்றுவித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின், பொருண்மியம் நலிந்த கிராமமான ஊற்றுப்புலத்தில் பிறந்து, வளர்ந்து, விறகு வெட்டி விற்றுப் பிழைக்கும் ஏழைத் தந்தையின் நிலையுணர்ந்து, க.பொ.த. சாதாரண தரத்தில் திறமைச் சித்தி பெற்ற மாணவியான செல்வி திருவாசகம், போக்குவரத்து வசதி, மேலதிக வகுப்புக்கள் உள்ளிட்ட தேவைப்பாடுகளின் நிமித்தம் உயர்தரம் குறித்தான எண்ணற்ற கனவுகளோடு நகர்ப்புறப் பாடசாலை நோக்கி அனுமதிக்காக வந்த அன்றே, பாதசாரிகள் கடவையில் வைத்துப் பலியாகியிருக்கும் சம்பவம் மிகவும் பாரதூரமானது.

இந்த மாணவியின் உயிர்ப்பலிக்கு பஸ் சாரதியின் அதிகரித்த வேகமும், மனிதாபிமானத்துக்கு அப்பாற்பட்ட பொறுப்பற்ற தன்மையுமே காரணம் என்பதை வெளியாகியுள்ள மறைகாண் ஒளிப்பதிவுக் காணொலிகள் மூலம் அறிய முடிகிறது.

எதிர்காலம் தொடர்பான ஏராளமான கனவுகளோடு உயர்தரக் கல்விக்காக கிளிநொச்சி நகரை நோக்கி அடியெடுத்துவைத்த அன்றையதினமே, உயிரிழந்த அந்த மாணவியின் உயிரை மீட்கவோ, எண்ணிலடங்கா இடர்பாடுகளுக்குள்ளும் தம் பிள்ளையை வளர்த்து, கனவுகளோடு காத்திருந்த பெற்றோருக்கு நேர்ந்திருக்கும் பேரிழப்பை ஆற்றுப்படுத்தவோ எம்மால் முடியாவிட்டாலும், இன்னொரு பிள்ளைக்கும், அந்தப் பிள்ளையின் குடும்பத்துக்கும் இத்தகு துயர்தோய்ந்த நிலை ஏற்படாதிருப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய சமூகக் கடமை எம் எல்லோருக்கும் உள்ளது என்பதை உணர்ந்து செயலாற்ற வேண்டிய தேவை எழுந்துள்ளது.

கடந்த 2016-07-25 ஆம் திகதியன்று காலை 07.15 மணியளவில் கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில் தரம் - 03 இல் கல்வி பயின்ற மாணவனான செல்வன் ஜீவன் அகரன் (வயது - 08) போக்குவரத்துப் பொலிஸார் முன்னிலையில், பாதசாரிகள் கடவையால் வீதியைக் கடக்க முற்பட்ட போது அதிவேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதி, தலைப்பகுதியில் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, உடனடியாகவே அநுராதபுரம் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டார். ஒரு மாதத்துக்கு மேலாக உணர்திறனற்ற (கோமா) நிலையில் சிகிச்சை பெற்ற அவர், இன்றும் இயல்புக்குத் திரும்பமுடியாத நிலையிலேயே வாழ்ந்து வருகிறார்.

அதே பாதசாரிகள் கடவையில் சைக்கிளோடு வீதியைக் கடக்க முற்பட்ட முதியவர் மீது அதிவேக மாக வந்த அரச பஸ் மோதியதில் கடந்த 2020-07-23 ஆம் திகதி படுகாயமடைந்த முதியவர் ஒருவர், கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பலனளிக்காது 2020-07-24 ஆம் திகதி உயிரிழந்திருந்தார்.

கடந்த 2020-08-24 ஆம் திகதியன்று கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலத்தில் (தேசிய பாடசாலை) கல்வி கற்கும் தனது பிள்ளைகளை ஏற்றிவருவதற்காக மோட்டார் சைக்கிளில் சென்ற திருமதி தசாயினி விக்னேஸ்வரன் என்பவர் மீது பாடசாலைக்கு முன்பாக, அதிகரித்த வேகத்தில் வந்த இராணுவ வாகனம் மோதியதில் அவர் படுகாயமடைந்து மயிரிழையில் உயிர் பிழைத்திருந்தார்.

உதாரணத்துக்காக குறிப்பிட்டுச் சொல்லப்பட்ட மேற்படி நான்கு விபத்துக்கள் உட்பட, ஏ - 9 பிரதான வீதியில் நிகழ்ந்த ஏராளமான கோர விபத்துக்களும் அதன் விளைவுகளும் அதிக வேகத்தால் ஏற்பட்டவையே என்பதைத் தாங்களும் அறிந்திருப்பீர்கள். அதனடிப்படையில் கீழ்வரும் விடயங்களை துரிதமாக செயற்படுத்துவது இந்த காலத்துக்குப் பொருத்தமாக இருக்குமென எதிர்பார்க்கிறேன்.

பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும், நிறைவடையும் நேரங்களில் மட்டுமன்றி பாடசாலைகள் இயங்கு நிலையிலுள்ள நேரம் முழுமைக்கும் (குறிப்பாக பிரதான வீதிகளில் அமைந்துள்ள பாடசாலைகளில்) போக்குவரத்துப் பொலிஸார் கடமையில் ஈடுபடுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளல்.

பாடசாலைகளை அண்மித்த பகுதிகளில் வேகத்தடைகளை அமைத்தல்.

ஏ - 9 வீதியின் இருமருங்கிலும் பாதசாரிகளுக்கான நடைபாதையைக் குறிக்கும் வாகன வரையறைக் கோட்டிலிருந்து நடைபாதைக்கென சீமெந்து அல்லது கொங்கிறீற்றிலான பாதை அமைத்தல்.

கிளிநொச்சி மாவட்டத்தினுடைய பிரதான வர்த்தக மையமான டிப்போச் சந்தியில் சுற்றுவட்டம் ஒன்று அமைக்கப்பட்டிருப்பின், அதனடிப்படையிலேனும் டிப்போச்சந்தியை அண்மிக்கும் வாகனங்கள் தமது வேகத்தைக் கட்டுப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டு மேற்படி விபத்துக்களையோ, அவற்றின் விளைவுகளையோ குறைத்திருக்க முடியும்.

டிப்போச் சந்தி என்பது கிளிநொச்சி சேவைச்சந்தை, கிளிநொச்சி மத்திய பஸ் நிலையம், பசுமைப்பூங்கா, கிளிநொச்சி மாவட்டத்தின் தாய்ப்பாடசாலையான கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம் (தேசிய பாடசாலை) ஆகியவற்றின் அமைவிட மையமாக உள்ளதோடு, கனகபுரம் வீதியின் இருமருங்கும் அமைந்துள்ள வங்கிகள், வர்த்தக நிலையங்கள், திருமண மண்டபங்கள், யாழ்ப்பாணம், வவுனியா பகுதிகளிலிருந்து ஏ - 9 வீதியூடாக கிளிநொச்சி நோக்கி வருகை தரும் வாகனங்கள் மற்றும் பொதுமக்கள், இரத்தினபுரம், கனகபுரம் பகுதிகளிலிருந்து நகரை நோக்கி வருகைதரும் வாகனங்கள் மற்றும் மக்கள் தொகை என்பவற்றை எதிர்கொள்கின்ற பிரதான மையமாக அமைந்துள்ளதால், அப்பகுதியில் சுற்றுவட்டமும், வாகனங்களின் வேகத்தைக் கட்டுப்படுத்தும் வகையிலான சமிக்ஞை விளக்குகளும் அமைக்கப்பட வேண்டும் என்று 2016-12-24 ஆம் திகதி எனது இணைத் தலைமையில் நடைபெற்ற கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன், கடந்த 2021-03-05 ஆம் திகதிய கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் என்னால் பிரஸ்தாபிக்கப்பட்டது.

அதனடிப்படையில், மேற்படி தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கோரி, பிரதம பொறியிலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, கிளிநொச்சி அவர்களுக்கு 2017-02-03 ஆம் திகதிய கடிதமும், மாகாணப் பணிப்பாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வடக்கு மாகாணம் அவர்களுக்கு 2018-08-05 ஆம் திகதிய கடிதமும் என்னால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. எனினும் இதுவரை சுற்றுவட்டம் மற்றும் சமிக்ஞை விளக்குகளை அமைப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்பட்டனவாக அறிய முடியவில்லை.

மேற்குறித்த விடயங்களின் அடிப்படையில் கிளிநொச்சி மாவட்ட மக்கள், மாணவர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் எதிர்கொள்ளும் போக்குவரத்து நெருக்கடிகளையும், அநியாயமாக நிகழ்ந்தேறும் விபத்துக்களூடான உயிரிழப்புக்கள் மற்றும் அவய இழப்புக்களையும் கருதி, இதுதொடர்பில் விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு தங்களைத் தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரதிகள், அரசாங்க அதிபர், மாவட்ட செயலகம், கிளிநொச்சி, தவிசாளர், கரைச்சிப் பிரதேசசபை - கிளிநொச்சி, பிரதேச செயலாளர், பிரதேச செயலகம் - கரைச்சி, மாகாணப் பணிப்பாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை - வடக்கு மாகாணம், நிறைவேற்றுப் பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கிளிநொச்சி, பிரதிப் பொலிஸ் மா அதிபர், பொலிஸ் திணைக்களம் - இரணைமடு, முதன்மைப் பொலிஸ் பொறுப்பதிகாரி, தலைமைப் பொலிஸ் நிலையம் - கிளிநொச்சி, தலைவர்/செயலாளர், வர்த்தகர் சங்கம் - கிளிநொச்சி ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

# ஜனவரி முதல் ஓட்டோக்கள் மீற்றர் ரெக்ஸிகளாக மாற்றம்

## விரைவில் வர்த்தமானி

இலங்கையில் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் கட்டாய நடைமுறைக்கு வரும் திட்டம் தொடர்பில் அனைத்து ஓட்டோக்களின் சாரதிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி அனைத்து ஓட்டோக்களும் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் மீற்றர் ரெக்ஸிகளாக மாற்றப்படுமென இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஓட்டோக்களை மீற்றர் ரெக்ஸிகளாக மாற்றும் திட்டம் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் மேல் மாகாணத்தில் நடைமுறைக்கு வரும்.

அத்துடன் 3 மாத காலப்பகுதிக்குள் நாட்டின் ஏனைய அனைத்து பிரதேசங்களிலும் இதற்கான நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப்படும்.

மேலும், மீற்றர் இல்லாது வாடகை ஓட்டோக்களைச் செலுத்துவோருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஆறு பேரின் உயிரைக் காவுகொண்ட படகு அரசாங்கம் அங்கீகாரம் வழங்கவில்லை

## நிமல் லன்சா இப்படிப் பதில்

குறிஞ்சாக்கேணி தடாகத்தில் இயங்கும் படகுச் சேவைக்கு அங்கீகாரம் வழங்கப்படவில்லை என கிராமப்புற வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா நேற்று (புதன்கிழமை) நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

கிண்ணியா நகர சபைத் தலைவருடன் தொடர்புடைய வர்த்தகர் ஒருவரால் படகுச் சேவை நடத்தப்படுவதாகவும் இதற்கு அரசாங்கத்தால் அங்கீகாரம் வழங்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

குளத்தின் குறுக்கே புதிய பாலம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், பாலத்தின் நிர்மாணப் பணிகள் முடியும் வரை மக்கள் தடாகத்தைச் சுற்றிச் செல்வதற்காகத் தற்காலிக வீதியும் அமைக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இருப்பினும் சம்பந்தப்பட்ட அரசாங்க அதிகாரிகளின் அனுமதியின்றி படகு சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார். மேலும் படகில் பயணிக்கும் பயணிகளுக்கு லைப் ஜாக்கெட்டுகள் வழங்கப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

திருகோணமலை கிண்ணியா - குறிஞ்சாக்கேணி தடாகத்தில் படகு கவிழ்ந்ததில் சிறுவர்கள் உட்பட 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் படகில் இருந்த 11 பேர் படுகாயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புக் குழு கல்முனை பிரதேச செயலகத்தில் நேற்று கூடியது

கல்முனை பிரதேச மட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அலகின் உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சீ.எம். றியாஸின் ஒழுங்கமைப்பில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி. ஜெகதீஸனின் தலைமையில் கல்முனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று (புதன்கிழமை) நடைபெற்றது.

கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியகத் அலி, சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக், பள்ளிவாசல்களின் தலைமை நிர்வாகிகள், கல்முனை மாநகர சபை பிரதிநிதிகள், திணைக்கள தலைவர்கள், படை அதிகாரிகள் மற்றும் அரச உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

மேலும் இந்த நிகழ்வில், வட கீழ் பருவப் பெயர்ச்சி மழைக்கு முதல் அனர்த்த முன் ஆயத்தத் திட்டங்கள் தொடர்பாகவும், வெள்ள நீர் தேங்கும் இடங்களை அகற்றுவது, அனர்த்த தயார்படுத்தலை செய்வது, கிராம மட்டத்தில் அனர்த்தக் குழுக்களை வலுப்படுத்தல், முன்னெச்சரிக்கை பொறிமுறைகளை விருத்தி செய்தல், வெள்ளம், சூறாவளி அனர்த்தங்கள் ஏற்படும் போது எவ்வாறு நடந்து கொள்ளல் என்பவை தொடர்பாகவும் மற்றும் நலன்புரி இடங்களின் விஸ்தரிப்பு, அவசர உதவிப் பொருள்கள், மூன்று பிரதேசங்களிலும் 24 மணி நேரமும் இயங்கும் அவசர கால கட்டுப்பாட்டு அறை செயற்பாடுகள், வெள்ள அனர்த்த திட்டங்கள், சேமிப்பு உபகரணங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.

## மட்டு. கடலில் படகு கவிழ்ந்தது மீனவர் ஒருவரைக் காணோம்

மட்டக்களப்பு முகத்துவாரம் கடல் பகுதியில் படகில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட ஒருவர் படகு கவிழ்ந்ததில் கடலில் வீழ்ந்து காணாமல் போயுள்ள சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதுடன் படகு செட்டிபாளையம் கடல் கரையில் கரை ஒதுங்கியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு திரைமடு சுவீஸ் கிராமத்தைச் சேர்ந்த 50 வயதுடைய சுந்தரராஜா சுரேஸ் என்பவரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

குறித்த மீனவர் சம்பவதினமான செவ்வாய் மாலை 6 மணியளவில் இயந்திரப் படகில் தனியாக முகத்துவாரம் கடலில் மீன்பிடிப்பதற்குச் சென்றுள்ளார்.

இந்த நிலையில் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது கடலில் இருந்து வலையை இழுக்கும் போது படகு கவிழ்ந்ததையடுத்து அவர் கடலில் வீழ்ந்து காணாமல் போயுள்ளார்.

இதேவேளை கவிழ்ந்த படகு செட்டிப்பாளையம் கடற்கரையில் கரை ஒதுங்கியுள்ளதாகவும் காணாமல் போனவரை கடற்படையினர் தேடிவருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## ஆறு வயதுச் சிறுமியை கடத்தி துன்புறுத்திய இளைஞன் கைது

6 வயது சிறுமி ஒருவரை கடத்திச் சென்று துன்புறுத்திய 25 வயதுடைய அயல்வீட்டு இளைஞனை கொடிகாமம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது

குறித்த சிறுமியின் பெற்றோர் பூநகரியில் வசித்து வருகின்ற நிலையில், சிறுமி கொடிகாமத்தில் உள்ள பாட்டி வீட்டில் தங்கியிருந்தார்.

சிறுமி கடந்த செவ்வாய்க்கிழமை அயல் வீட்டில் உள்ள சிறுவர்களுடன் விளையாடி விட்டு வீட்டுக்குத் திரும்பி வரும் வேளையில் பக்கத்து வீட்டு இளைஞன் சிறுமியை கடத்திச் சென்று தனது வீட்டில் கயிற்றால் கட்டி வைத்து துன்புறுத்தியுள்ளார்.

அதன்பின்னர் சிறுமியின் உறவினர்களிடம் 'சிறுமியின் தந்தை வந்தால் தான் சிறுமியை விடுவிப்பேன்' என கூறியுள்ளார்.

இந்த நிலையில் சிறுமியின் உறவினர்கள் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் செவ்வாய்க்கிழமை முறைப்பாடு செய்துள்ளனர்.

முறைப்பாட்டின் அடிப்படையில் விரைந்து செயற்பட்ட கொடிகாமம் பொலிஸார் அன்றைய தினமே சிறுமியை மீட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்த்துள்ளமையுடன் குறித்த இளைஞனையும் கைது செய்துள்ளனர்.

பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில், அந்த இளைஞனுக்கும் சிறுமியின் தந்தைக்கும் இடையில் நகைப் பிரச்சினை இருந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட இளைஞன் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார் எனக் கொடிகாமம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## தேசிய கராத்தே அணிக்கு கிழக்கு மாகாணத்திலிருந்து முதன்முறையாக பெண் வீராங்கனை ஒருவர் தெரிவு!



தேசிய கராத்தே அணிக்கு கிழக்கு மாகாணத்திலிருந்து முதன் முறையாக பெண் வீரர் ஒருவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளமையுடன் இருவர் மட்டக்களப்பிலிருந்து தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதியிலிருந்து தேசிய கராத்தே அணிக்கு தெரிவுசெய்யப்பட்ட வீரர், வீராங்கனையை கௌரவிக்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு மாநகரசபையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு ஜப்பான் கராத்தே மரியோகிக்காய் சங்கத்தின் வீரர் மற்றும் வீராங்கனைகளே இவ்வாறு தேசிய கராத்தே அணிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு ஜப்பான் கராத்தே மரியோகிக்காய் சங்கத்தின் பிரதான போதனாசிரியர் பொறியியலாளர் சிகான் முருகேந்திரன் வழிகாட்டலில் போதனாசிரியர் எச்.ஆர்.சில்வாவின் பயிற்றுவிப்பு ஊடாக ஆர்.துஸ்யந்தன் என்னும் வீரரும் வி.விதுஜா என்னும் வீராங்கனையும் இவ்வாறு தேசிய கராத்தே அணிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாணத்திலிருந்து முதன்முறையாக பெண்ணொருவர் தேசிய கராத்தே அணிக்கு மட்டக்களப்பிலிருந்து தெரிவுசெய்யப்பட்டுள்ளமையுடன் 21வயதுக்குட்பட்ட தேசிய அணியில் முதன்முறையாக மட்டக்களப்பிலிருந்து ஆண் ஒருவரும் தெரிவுசெய்யப்பட்டுள் ளனர்.

இவர்களை கௌரவிக்கும் நிகழ்வு செவ்வாய் மட்டக்களப்பு மாநகரசபையின் விளையாட்டுக் குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வர் தி.சரவணபவன், பிரதி முதல்வர் க.சத்தியசீலன் மற்றும் மாநகரசபை உறுப்பினர்கள், மட்டக்களப்பு ஜப்பான் கராத்தே மரியோகிக்காய் சங்கத்தின் போதனாசிரியர் எச்.ஆர்.சில்வா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது தேசிய அணிக்கு தெரிவுசெய்யப்பட்ட வீரரும் வீராங்கனையும் இதன்போது மாநகரசபை முதல்வர், பிரதி முதல்வர் ஆகியோரால் கௌரவிக்கப்பட்டனர்.

## வாழைச்சேனையில் சட்டவிரோத மண் அகழ்வு 6 பேர் விசேட அதிரடிப்படையினரினால் கைது

### வாகனங்களும் மீட்பு

மட்டக்களப்பு – வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள வடமுனை மற்றும் ரிதிதென்னை பகுதியில் அனுமதிப்பத்திரங்களை மீறி டிராக்டர் மற்றும் கனரக வாகனங்களைப்பயன்படுத்திமண் அகழ்வில் ஈடுபட்ட 6 பேரை விசேட அதிரடிப்படையினர் கைது செய்தமையுடன் 3 டிராக்டர், 3 கனரக வாகனங்களை மீட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளன என வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வடமுனை ஊத்துச்சேனை பகுதியில் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் அனுமதிப்பத்திரத்தை மீறி டிராக்டரில் மணல் அகழ்வில் ஈடுபட்ட 3 பேரைக் கைது செய்த மையுடன் 3 டிராக்டரையும் மீட்டனர்.

அதேவேளை ரிதிதென்னை பகுதியில் அனுமதிப்பத்திரத்தை மீறி கனரக வாகனத்தில் மணல் அகழ்வில் ஈடுபட்ட 3 பேரைக் கைது செய்தமையுடன் 3 கனரக வாகனங் களை மீட்டனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட வர்களையும். வாகனங்களையும் விசேட அதிரடிப்படையின் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இவர்களை நீதிமன்றில் முன்னிறுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## சுழிபுரம் மேற்கு வீதியை புனரமைக்க கோரிக்கை

சுழிபுரம் மேற்கு வீதியை புனரமைத்து தருமாறு சுழிபுரம் பிரதேச சபை தவிசாளர்க்கு தி.சிவசண்முகநாதன் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டவை வருமாறு சுழிபுரம் மேற்கு, சுழிபுரம் மத்தி ஆகிய பிரதேசங்களுக்கு சுழிபுரம் சந்தியில் இருந்து செல்லும் கல்லை வேம்படி வீதி, பெரிய தம்பிரான் வீதி ஆகிய வீதிகள் மாரி மழைக் காலத்தில் ஒரு மாதம் வரை நீர் தேங்கி போக்கு வரத்து இடையூறாக இருக்கிறது. ஆகவே, அதனைச் சீர்செய்து தருமாறுகோரி தி.சிவசண்முகநாதனால் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்துடன் இணைத்து, புனரமைக்க வேண்டிய பாதை வரைபடங்களும் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

காலைக்கதிர் Kalaikkathir

# நிலையான தீர்வைத் தேடுவதில் தமிழரோடு இணைகிறது அமெ.

## அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்தின் இலங்கை விவகாரப் பிரதிநிதி தெரிவிப்பு

வொஷிங்டன், நவம்பர் 25

"இலங்கை தொடர்பான அமெரிக்க வெளிவிவகாரக் கொள்கையைத் தீர்மானிப்பதில் மனித உரிமைகள் விவகாரமே மையப் பொருளாக இருக்கின்றது. அங்கு நிலையான தீர்வைத் தேடுதல் மற்றும் தங்களின் நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதற்கு முழுக்குரல் கொடுக்கும் விடயத்தில் இலங்கைத் தமிழ்மக்களோடு அமெரிக்கா இணை கின்றது."

– இப்படி அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் இலங்கை விவகாரங்களைக்கையாளும்பொறுப்பதிகாரிதெரிவித்திருக்கின்றார்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் வெளிவிவகார அமைச்சில் மத்திய மற்றும்தெற்காசிய விவகாரங்களுக்குப்பொறுப்பான உதவிச் செயலாளர் டொனால்ட் லூவின் கீழ் இலங்கை விவகாரம் கையாளப்படுகின்றது.

அவரும், அவரது துணை அதிகாரியான கெலி அம்மையாரும் கடந்த திங்களன்று தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் சட்டநிபுணர் குழுவுடனும் உலகத் தமிழர் பேரவையின் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடிய பின்னர்அவரது அலுவலகம்விடுத்த உத்தியோகபூர்வ டுவிட்டர் குறிப்பில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தலைமையில் கூட்டமைப்புக் குழு பங்கு பற்றியது.






மேற்படி சந்திப்பு மீள் நல்லிணக்கம் தொடர்பாக முன்னெடுக்கப்பட்டதாகவும் அந்த டுவிட்டர் செய்தி தெரிவிக்கின்றது.

நேபாளத்துக்கான விஜயத்தை முடித்துக் கொண்டு வொஷிங்டன் திரும்பியிருந்த காரணத்தினால் கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகளை முன்னிட்டு இந்தக் கூட்டத்தில் டொனால்ட் லூ நேரில் பங்குபற்றாமல் சூம் முறையில் கலந்து கொண்டார்.

## வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபை உப தவிசாளராக சுப்பிரமணியம் தெரிவு

(ந.லோகதயாளன்)

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் புதிய உப தவிசாளராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த சி.சுப்பிரமணியம் அமோக உறுப்பினர்களின் ஆதரவுடன் சபையால் நேற்று தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் உப தவிசாளரான மகேந்திரன் கடந்த மாதம் சுகயீனம் காரணமாக உயிரிழந்ததையடுத்து வெற்றிடமாகக் காணப்பட்ட உப தவிசாளருக்கான தெரிவு நேற்று காலை சபையில் போட்டிக்கு விடப்பட்டது.

இதன்போது, ஈரோஸ் கட்சியைப் பிரதிநிதிப்படுத்தி சசிதரனும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக சி.சுப்பிரமணியமும் போட்டியிட்டனர்.

சி.சுப்பிரமணியத்துக்கு ஆதரவாக 16 வாக்குக்கள் கிடைக்கப்பெற்றன. இவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஈரோஸ் அமைப்புக்கு மூன்று வாக்குக்கள் கிடைத்தன.

நேற்று சபையின் 24 உறுப்பினர்கள் பிரசன்னமாகியிருந்தனர். அதில் 16 பேர் ஆதரவாக வாக்களித்தனர். ஐந்து பேர் நடுநிலையை வகித்தனர். ஐந்து பேர் சபைக்கு சமுகமளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## தப்பியது கூட்டமைப்பின் பருத்தித்துறை நகர சபை

### தலைவரின் மேலதிக ஒரு வாக்கால் அடுத்த ஆண்டு 'பட்ஜட்' நிறைவேற்றம்

பருத்தித்துறை நகர சபை யின் அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் சபைத் தலைவரின் மேலதிக ஒரு வாக்கால் இன்று நிறைவேறியது.

சபையின் விசேட கூட்டம் நேற்று காலை 9 மணிக்கு ஆரம் பமானபோது சபைத் தலைவர் யோசப் இருதயராஜ் வரவு-செல வுத்திட்டத்தைச்சமர்ப்பித்தார்.

அதைப் பகிரங்க வாக்கெடுப்புக்கு விடுமாறு கோரியதை அடுத்து வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

வாக்கெடுப்பின்போது ஆளும்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் 5 பேரும், தமிழர் விடுதலைக் கூட்டணி, சுயேச்சைக்குழு ஆகியவற்றின் தலா ஓர் உறுப்பினருமான 7 பேரும் ஆதரவாகவும், எதிர்க் கட்சியான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த 6 உறுப்பினர்களும், ஈ.பி.டி.பியைச் சேர்ந்த ஓர் உறுப்பினருமாக 7 பேர் எதிராக வாக்களித்தனர்.

மொத்தமாகவுள்ள 15 உறுப்பினர்களில் ஈ.பி.டி.பியைச் சேர்ந்த ஓர் உறுப்பினர் சமுகமளிக்காததால் வாக்கெடுப்பில் சமநிலை ஏற்பட்டது.

இதனால் வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கச் சபைத் தலைவருக்கு உள்ள தற்துணிவு அதிகாரத்துக்கு அமைய அவர் மேலதிக ஒரு வாக்கு அளித்தமையால் வரவு - செலவுத் திட்டம் நிறைவேறியது.





உத்தியோகபூர்வ விஜயமாக சென்னை சென்றிருக்கும் கொழும்புக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே சென்னையில் நேற்று தமிழக ஆளுநர் ஆர். என். ரவியையும், நேற்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினையும் சந்தித்துப் பேசினார். இலங்கை – இந்திய மீனவர் பிரச்சினைகள், முரண்பாடுகளுக்கான தீர்வு உட்பட பல விடயங்கள் குறித்து இந்தச் சந்திப்புக்களின் போது பேசப்பட்டதாகக் கூறப்பட்டது.


## நன்றி நவிலல்



எமது ஞானவிளக்கு

**ம.வ.கானமயில்நாதன்**

அணைந்த செய்தி அறிந்து
எமது துயரில் பங்குகொண்ட அனைவருக்கும்
எமது மனமார்ந்த நன்றிகள்.

இறுதி மரியாதையிலும் இறுதிச் சடங்கிலும் அஞ்சலி நிகழ்விலும்
நேரில் கலந்துகொண்டு துயரினை பகிர்ந்து கொண்டவர்கட்கும்
தொலைபேசி மூலமாகவும் முகப்புத்தகம் மற்றும் இதரவழிகளிலும்
எம்மை ஆறுதல் படுத்திவர்களிற்கும்

சிறப்பு கௌரவம் செய்த
உதயன் குழுமம் மற்றும்
காலைக்கதிர் – பசுமை ஊடக இல்லம் மற்றும்
ஊடகத்துறை சார் அனைத்து உள்ளங்களிற்கும்
ஊடக நிறுவனங்களிற்கும்

உற்றார், உறவினர், நண்பர்கள்,
நலன்விரும்பிகள் அனைவருக்கும்

மீண்டும் எமது உளம்நிறை நன்றிகள்.

குடும்பத்தினர்

# இராஜாங்க அமைச்சரின் சிரிப்பின் விளைவாக கிண்ணியாவில் பல உயிர்கள் காவுகொள்ளல்!

## இம்ரான் மஹ்ரூப் காட்டம்



குறிஞ்சாக்கேணி பாலத்தை புனரமைத்துத்தருமாறு கோரிக்கை விடுத்தபோது விடயத்திற்கு பொறுப்பான இராஜாங்க அமைச்சர் கேவலமாக சிரித்தார் என்றும் அந்தச் சிரிப்பின் விளைவாக பல உயிர்கள் இன்று காவுகொள்ளப்பட்டுள்ளன என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

திருகோணமலை – குறிஞ்சாக்கேணியில் மோட்டார் பொருத்தப்பட்ட மிதப்புப்பாலம் மூழ்கிய விபத்தில் பலர் உயிரிழந்துள்ளனர்.

இந்த நிலையில், நாடாளுமன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே, அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இதன்போது தொடர்ந்தும் தெரிவித்த அவர் –

திருகோணமலை – குறிஞ்சாக்கேணியில் பாலம் அமைக்கும் நிர்மாணப் பணிகள் இடம்பெற்று வரும் பகுதியில், பொருத்தப்பட்ட மிதப்புப்பாலம் மூழ்கிய விபத்தில் இது வரையில் 10 பேரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக இதில் அதிகமானவர்கள் பாடசாலை செல்லும் மாணவ மாணவிகளாகக் காணப்படுகின்றனர். இதுவொரு பெரிய பிரச்சினையாகக் காணப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பாக இதற்கு முன்னர் விடயத்துக்குப் பொறுப்பான இராஜாங்க அமைச்சரிடம் நான் கேள்வி எழுப்பியபோது, குறித்த இடத்தில் பாலத்தை நிர்மாணிப்பதற்கு முன்னர், அதற்கான பதில் பாதையொன்றை நிர்மானிக்க வேண்டிய கட்டாயம் இருப்பதாகக் கோரியிருந்தேன். இதைக் கேட்ட இராஜாங்க அமைச்சர் கேவலமாகச் சிரித்தார். அந்த சிரிப்பின் விளைவாக பல உயிர்கள் இன்று காவுகொள்ளப்பட்டுள்ளன.

எனவே குறித்த பாதை சட்டப்படி இயங்குகிறதா? எந்த அனுமதியுடன் இயங்குகின்ற பாதை? இதற்கு யார் பொறுப்புக்கூற வேண்டும் என்பதை அறிவிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# நேர்முகத்தேர்வு

நல்லூர் பிரதேச செயலகத்தில் இளம்தொழில்முயற்சியாளர்களுக்கு 100,000 காணித்துண்டுகள் வழங்கும் நேர்முகத் தேர்வு நடைபெற்றுக் கொண்டிருப்பதனால் மேற்படி காணித் துண்டிற்காக விண்ணப்பித்தவர்களில் ஒரு குடும்பத்தில் யாராவது ஒருவருக்கேனும் நேர்முகத் தேர்வுக் கடிதம் கிடைக்காதோர் எதிர்வரும் 26.11.2021 – 03.12.2021 காலப்பகுதியில் நேர்முகப் பரீட்சைக்கு ஏதுவாக பின்வரும் தகவல்களுடன் அலுவலக நேரத்தில் நல்லூர் பிரதேச செயலக காணிப் பயன்பாட்டு திட்டமிடல் கிளைக்கு சமூகமளிக்குமாறு பிரதேசசெயலாளர் தெரிவித்துள்ளார்.

1. ஆளடையாளத்தை உறுதிபடுத்தக்கூடியதான ஆவணம் – தேசிய அடையாள அட்டை மற்றும் அதன் நிழற்படப்பிரதி (தேசிய அடையாளஅட்டை இல்லையெனில் வெளிநாட்டுக் கடவுச்சீட்டு)
2. வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்காக கிராம அலுவலரால் வழங்கிய சான்றிதழ்.
3. தொழிற்முயற்சியினைத் தொடங்குவதற்கு சொந்தமான காணி இல்லையெனில் அது தொடர்பாக உறுதிப்படுத்துவதற்குசத்தியக்கடதாசி.
4. தொழில்முயற்சி தொடர்பான கருத்திட்ட அறிக்கை (கருத்திட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்)

▮ புதிதாக தொழில் முனைவராயின் தொடங்குவதற்கு எதிர்பார்க்கும் தொழில்முயற்சி தொடர்பாக முழுமையான விவரங்கள் உள்ளடக்கிய கருத்திட்ட பிரேரணை அறிக்கை.

▮ தற்போது தொழில் முயற்சியினை பேணுபவராயின் அது தொடர்பாக முழுமையான விவரங்களும், தீர்த்துக்கொள்வதற்குப் பிரச்சினைகள் இருப்பின் அவற்றையும் உள்ளடக்கிய அறிக்கை.

5. உரிய அறிக்கைகள் மூலம் தங்களது தொழில்முயற்சி ஆற்றல் தொடர்பாக விடயங்களை சமர்ப்பித்தல் தங்களது பொறுப்பாகும்.

# ஊடகச் சட்டங்களை திருத்தும் அரசாங்கம்

இலங்கையில், ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் தொடர்பில் தற்போது நடைமுறையில் உள்ள சட்டங்களை திருத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இது தொடர்பில், ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

உள்நாட்டுச் சட்டங்கள், சர்வதேச சட்டங்கள், தேசிய மற்றும் சர்வதேச ஊடக நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி இலங்கையில் ஊடக கொள்கையொன்றை தயாரிப்பது தொடர்பில் தற்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக ஊடக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சமூக ஊடகங்கள் உட்பட்ட ஊடகங்களின் பயன்பாடு மற்றும் நடத்தை பற்றிய தொழில்சார் திறன்கள் மற்றும் கல்வியுடன் கூடிய ஊடகவியலாளர்களுக்கான பின்னணியை உருவாக்க வேண்டியதன் அவசியம் ஏற்பட்டுள்ளது.

இதன்படி, ஊடகம், சந்தைப்படுத்தல், கல்வி, சட்டம், நிர்வாகம் மற்றும் பொருளாதாரம் போன்ற துறைகளில் அனுபவமுள்ளவர்களைக் கொண்ட குழுவொன்றை நியமிப்பதற்காக ஊடகத்துறை அமைச்சரால் முன்வைக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# விபத்துக்கு உள்ளான படகு சேவையை இயக்கியோர் பிரதேசத்தை விட்டு ஓட்டம்

கிண்ணியா – குறிஞ்சாக்கேணி பகுதியில் விபத்துக்குள்ளான படகு சேவையை இயக்கியவர்கள் அந்தப் பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என கிண்ணியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்துவதற்காக கிழக்கு மாகாண ஆளுநரினால் நியமிக்கப்பட்ட குழு நேற்று (புதன்கிழமை) கூடி ஆராய்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இந்தச் சம்பவத்தை அடுத்து பிரதேசத்தில் ஏற்பட்ட அமைதியின்மை தொடர்பாகவும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# கிண்ணியா படகு விபத்து அறுவர் வீடு திரும்பினர்



திருகோணமலை மாவட்டம் கிண்ணியா குறிஞ்சாக்கேணியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற படகு விபத்தின் போது கிண்ணியா ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த ஆறு பேர் நேற்று (புதன்கிழமை) மதியம் சிகிச்சையை முடித்து விட்டு வீடு திரும்பியுள்ளனர் என வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி வைத்தியர் ஜிப்ரி தெரிவித்துள்ளார்.

இதில் இரு சிறுவர்களும் நான்கு ஆண்களும் அடங்குவர். படகு விபத்தில் சில பேர் உயிரிழந்த நிலையில், 27 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இவர்களில் ஒருவர் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கும், மற்றுமொருவர் கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கும் அனுப்பப்பட்டிருந்தனர். தற்போது ஏனையோர் சிகிச்சை பெற்று வருகின்றனர் என அவர் கூறியுள்ளார்.

நேற்று (புதன்கிழமை) திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கிண்ணியா ஆதார வைத்தியசாலைக்கு விஜயம் செய்து படகு விபத்தில் சேர்க்கப்பட்டவர்களை நலன் விசாரித்து பின் ஊடகங்களுக்கு இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

இந்த படகு விபத்து சம்பவம் பெரும் கவலையளிக்கிறது, குறிஞ்சாக்கேணி பால விடயத்துடன் சம்பந்தப்பட்ட இதன் பின்புலத்தில் உள்ளவர்களைத் தராதரம் பாராது தண்டிக்க வேண்டும் என இதன்போது அவர் தெரிவித்துள்ளார்.

# படகு விபத்துத் தொடர்பில் கிழக்கு ஆளுநர் பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தவேண்டும்

## இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை

கிண்ணியா, குறிஞ்சாக்கேணி படகுப்பாதை விபத்தில் உயிரிழந்த நான்கு மாணவர்கள் மற்றும் ஓர் ஆசிரியரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துள்ள இலங்கை ஆசிரியர் சங்கம் குறித்த படகு விபத்து தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர் பக்கச்சார்பற்ற விசாரணையை முன்னெடுக்கவேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளது.

மட்டக்களப்பில் உள்ள மட்டு.ஊடக அமையத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது இலங்கை ஆசிரியர் சங்கத்தின் கிழக்கு மாகாண இணைப்பாளரும் அச்சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட பொதுச்செயலாளருமான பொன்னுத்துரை உதயரூபன் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

கிழக்கு மாகாண ஆளுநர் நீதியான விசாரணையை நடத்தி இந்த மாணவர்களுக்கான நஷ்டஈடுகளை வழங்கவும் முன்வர வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலும் இவ்வாறான பயணங்களை மேற்கொண்டு பாடசாலைகளுக்குச் செல்லும் சூழ்நிலை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இருக்கும் காரணத்தால் அவர்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்த கிழக்கு மாகாணசபை நடவடிக்கையெடுக்கவேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

கிழக்கு மாகாணத்தில் பாடசாலைகளுக்குப் பகுதி பகுதியாக மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளுக்கு அழைக்கப்படும் நிலையில் பரீட்சைகளுக்கு மாணவர்களை முழுமையாக அழைக்கும்நிலையுள்ளதாகவும் இதனை வன்மையாகக் கண்டிப்பதுடன் சுகாதார வழிமுறைகளையும் சுற்றுநிருபங்களையும் பேணுமாறும் உதயரூபன் தெரிவித்தார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.11.2021 இல் வெளியிடப்பெற்றது.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 1941 – 08 – 27



உதிர்வு 2021 – 10 – 26

காரைநகர் பண்டித்தாழ்வை பிறப்பிடமாகவும்,
நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவிலடியை
தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர்
# பொன்னம்பலம் வேலாயுதபிள்ளை

கடந்த 26.10.2021 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் 31ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று வியாழக்கிழமை (25.11.2021) எமது தற்காலிக இல்லத்தில் நடைபெறும்.

அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து நேரிலும், தொலைபேசி ஊடாகவும் ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் பல்வேறு வழிகளிலும் இறுதிக் சடங்குகளிலும் ஏனைய உதவிகளையும் புரிந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றிகள்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

நிரந்தர முகவரி:- பண்டித்தாழ்வு, வலந்தலை, காரைநகர்.
தற்காலிக முகவரி:-வீரமாகாளி அம்மன் கோவிலடி, நல்லூர்.

குடும்பத்தினர்